


270
220/352
V58
N51-2
108399



# ரஸ்புடின்

ஊடுருவி



கலை மன்றம்

P.O.No 275 சென்னை-1.

பதிப்புரிமை
முதற் பதிப்பு—1951
இரண்டாம் பதிப்பு—1952

•

•

விலை அணா எட்டு

•

•

ஸ்ரீமகள் அச்சகம்
சென்னை-1

# நோக்கம்

மதப்போர்வையில் புகுந்து கொண்டு மக்களைஏமாற்றி மன்னனை மயக்கி ருஷ்ய நாட்டைச் சீரழித்த வஞ்சகப் பாதிரி "ரஸ்புடீன்" அவனது கொடுமைகள் அடாத செயல்கள். ஆணவத் திமிர் இவைகளை ஓரளவுக்கு விளக்கிக் காட்டுகிறது "ரஸ்புடீன்" என்னும் இந்நூல்.

நம் நாட்டிலும் சில குட்டி "ரஸ்புடீன்கள்" உண்டு! அவர்களுக்கு எச்சரிக்கையாகவும், மதச் சேற்றில் மயங்கிக் கிடக்கும் மக்களுக்கு, மதமயக்கம் நீக்கும் மருந்தாகவும்அமைய வேண்டும் என்பதே இந் நூல் வெளியிடுவதன் நோக்கம்!

வணக்கம்,
கலைமன்றத்தார்.

# ர ஸ் பு டீ ன்

"அவர் வருகிருர்."

"யாரடியது?"

"அவர்தான் அவர்."

"பெயர் சொன்னுல்தானே தெரியும்?"

"இன்னுமா உனக்குத் தெரியவில்லை! மகான் வருகிருரடி! மகான்!!"

"எந்த மகானடி?"

"அவர் திருநாமம் என் எச்சில்பட்ட வாயால் சொல்லலாகாது. சொல்லலாகாதே? அபசாரம்! குற்றம் செய்து விட்டேன். சொல்லும் யோக்யதை இல்லையடி எனக்கு. என்னடி. இன்னுமா உனக்குப் புரியவில்லை. நேற்றைய பத்திரிகைகளைப் புரட்டிப்பார். அவை கூறும் உனக்கு! நான் போகவேண்டும்; போய்ப் புண்ணியரைப் பார்க்கவேண்டும்; பாப மன்னிப்புப் பெறவேண்டும்" என்று கூறிக்கொண்டே அந்தக் கோமாட்டி வண்டியேறி சென்றுவிட்டாள்.

*　　　*　　　*

அந்த நகரம் முழுவதுமே மணியோசை, மங்கலத் தோரணங்கள், விசேட வாத்தியங்கள், மக்கள் ஒருவர்க் கொருவர் "அவர் வருகிருர்; காணும் பாக்கியம் பெற்ருேம்!" என்று கூறிக்கொள்ளும் காட்சி! இது மாத்திரமல்ல! பாதிரிமார்கள் பயபக்தி விசுவாசத்துடன் பதுமைகள் போல நல்வரவுகூற நிற்கும் காட்சி! பெரிய பெரிய பிரபுக்கள், சீமாட்டிகள், அமைச்சர்கள்,

தளபதிகள், போர்வீரர்கள் எல்லோரும் அணிவகுத்து நிற்கும் காட்சி! இவற்றைக் "காண இருகண்கள் போதாதே" என்று பாடலாம் போல இருந்தது. "இந்த மாதிரியான ஒரு வரவேற்பு மன்னர் வருவதானாலும் நிகழ்வதில்லை!

"இந்த வரவேற்பு யாருக்கு? ஏன்?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அவசரப்படாதீர்கள்!

அவன் வருகையின்போது பெரிய பெரிய மடாதிபதிகளின் வணங்கா முடிகள் வளைந்து வணக்கம் செய்கின்றன. சீமான்கள், சிங்காரிகள் பயம் கலந்த வணக்கம் தெரிவிக்கின்றனர். அமைச்சர்கள் அவன் அடிகளைத் தொட்டுக் கும்பிடுகின்றனரென்றால், மற்ற பாமர மக்கள் எப்படி ஏத்தி யேத்தித் தொழுது இருப்பார்கள் என்று சொல்லாமலேயே விளங்கும். இந்த அளவுக்கு மக்கள் உள்ளத்தில் இடம் பெற்று மக்களால் வரவேற்கப்படுகின்றான்.

## "யார் அவன்?"

வள்ளலா அவன்? அல்ல! அறிஞனா? அல்ல! அரசனா? இல்லை! அழகனா? தப்பு! புலவனா? பொய்! வீரனா? தவறு! ஆனால் அவன் ஒரு பேயன்! வஞ்சகன்! கொலைக்காரன்! கொள்ளையிடுவோன்: கற்பழிப்பதில்—கன்னிப் பெண்கள், கலியாணம் ஆனவர்கள், விதவைகள் என்ற—வித்தியாசம் பாராமல் எல்லோரையும் கட்டி அணைத்து கற்பைச் சூறையாடும் காமுகக் கயவன்! கடவுள் பெயரைச் சொல்லி, காமலீலைகள் புரியும் கசடன்! மதவேடம் பூண்ட மாபாதகன்! ஏன்? உலகில் உள்ள பாபங்கள் அனைத்தும் ஒன்றுதிரண்ட ஒரே உருவம்தான் அவன்! அவனைத்தான் அந்த மக்கள் வரவேற்று வாழ்த்துக் கூறினர்; வணங்கி நின்றனர்.

"எங்கே இப்படி நடந்தது என்று கேட்கிறீர்கள்?" ருஷ்யாவில், செயின்ட் பீடர்ஸ்பர்க்கில் இப்போதைய

லெனின்கிராடில்தான். ஆனால், இப்போதல்ல—ஜார் மன்னர் காலத்தில். நீங்கள் நம்பவில்லையா! என்னை நம்புங்கள்! தோழர்களே, நம்புங்கள்! நம்பிக்கை இல்லை யென்றால் மேலும் படியுங்கள்!

* * *

ஆ சி ய ா வின் வடக்கேயுள்ள சைபீரியாவில் 'தொபால்' நதி தீரத்தில் "தொபால்ஸ்க்" என்னும் பட்டணத்தைச் சார்ந்த ஒரு சிற்றூர் "பீட்ரோ நாவஸ் காய்" என்பது. இந்தப் பட்டினம் "ஆல்ஸ்டாய்" மலைகளைச் சுற்றியுள்ள பாலைவனம் போன்ற ஒரு சமவெளி. நீர் வளம், நிலவளமற்ற பூமி. தாங்கமுடியாத அளவுக்குக் குளிர். அங்குள்ள மரஞ்செடிகள் வளமின்றி மெலிந்திருக்கும். சுற்றிலும் சதுப்பு நிலங்களும், பனிக்கட்டிகளும்தான் அங்குக் காணமுடியும்.

ருஷ்யநாட்டுச் சைபீரியர்களே அங்குப் பெரும்பாலும் வசித்து வந்தனர். அவர்களுடன் மங்கோலிய வர்க்கத்தைச் சேர்ந்த "சமயோதர்கள்" என்னும் நாடோடிக் கூட்டத்தினரும் இருந்தனர். இந்த "சமயோத" வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மாந்திரீகத்தில் நம்பிக்கை யுள்ளவர்கள், மிக மிக மட்டரகமான அநாகரிகத்தில் மூழ்கியவர்கள். மந்திரச் சக்தியால் இவ்வுலகையே ஆட்டிப்படைக்கலாம் என்ற நம்பிக்கை யுடையவர்கள். இந்த வம்சத்தைச் சேர்ந்த ஒருத்தி சைபீரிய வர்க்கத்தைச்சேர்ந்த சாதாரணக்குடியானவன் ஒருவனை மணந்தாள். அவள் தன் மந்திரச் சக்தியால் உலகையே ஆட்டிப்படைக்க வேண்டும் என்ற ஆசை யுடையவள். இந்த தம்பதிகள் நடத்திய வாழ்க்கையை நாம் வாழ்க்கை என்று கூறமுடியாது. மனதாலும் எழுத்தாலும் அளந்துசொல்ல முடியாத அநாகரிக வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்தார்கள்.

அந்தத் தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. தாய் தந்தையரின் பெயரை எடுக்கவே இப்

பிள்ளை பிறந்தது என்பதைப் பின்னர்தான் அறிய முடிந்தது. குழந்தைக்கு "கிரிகரி எபிமோவிட்ச்", என்ற பெயரிட்டு வளர்த்தனர். அதுவும் வளர்ந்தது.

நாகரிகம் என்பதைக் காணமுடியாத, நாகரிகம் என்ற சொல்லைக்கூட கேட்டறியாத, அநாகரிகப் படு பாதாளத்தில் மூழ்கியிருந்த அந்தச் சிற்றூரில் நாகரிகம் உண்டாக்க, கிறிஸ்துவப் பெருமான் அருமையை அறிவிக்க, ருஷ்யாவிலிருந்து பாதிரிமார்கள் அனுப்பப் படுவார்கள், அவர்களும் அங்கு வருவர், நல்லொழுக் கத்தையும், தூய்மையையும் போதிக்க! ஆனால், அந்த இரண்டொரு நாட்களில் இவர்களிடமிருந்த நல் லொழுக்கம் நழுவிவிடும்; தூய்மை மாயமாய் மறையும்; கிறிஸ்துவப் பெருமானை மறந்து கிரகஸ்தராகிவிடுவர். தீமையை ஒழிக்க வந்தவர்கள் தீமைபுரிவதே எம் பணி என்பர். பக்தர்களாகிய பாதிரிகளுக்குப் பக்கலில் பாவையர்கள் இருப்பர். மறு உலகத்தைப் பற்றிப் பேசவந்தவர்கள், மதுக்கோப்பையைத் தேடும் பணி யில் ஈடுபடுவர். இத்தகு கொடிய பழக்கவழக்கங்கள் கொஞ்சிக் குலவிடும் இந்தக் குக்கிராமத்தில் பிறந்து வளரும் நம் "கிரிகரி எபிமேவிட்ச்" எப்படி நல் லொழுக்க முள்ளவனாக முடியும்?

இவன் இளமையில் எந்த ஓர் உயிரையும் பார்வை யால் தன் பக்கம் இழுக்கும் சக்தி பெற்றிருந்தான் என்று அந்நாட்டவர் கூறுவர். இவன் எழுதப்படிக்கத் தெரியாதவன்தான். ஆயினும், வாலிபப் பருவம் அடைவதற்குள் எல்லாவித துஷ்டதனங்களுக்கும் அவன்தான் அரசன். பாதகம் என்பது அவனுக்கு பால் சோறு. கள்ளம் என்றால் உள்ளம் களிப்பான். சோம்பல் அவனுடைய சொந்த சொத்து. இரக்கம் என் பது அவனைக் கண்டஞ்சி ஓடும். பெண் என்ற சொல்லைக் கேட்டால் பெருமகிழ்ச்சி கொள்வான். நாணம் அவ னைக் கண்டு நடுங்கும் சூது என்பது அவன் சுற்றம். ஆணவம்தான் அவனின் ஆட்சி. இத்தகு இவன் இயற்

கையில் உண்டான தைரியத்தாலும் கொடுமைகள் புரிந்து பழகிவிட்டதாலும் எவரையும் இலட்சியம் செய்யாது காலம் கழித்து வந்தான்.

இளமையிலேயே ருஷ்யாவில் எத்தனை விதமான மதுவகைகள் உண்டோ அத்தனை வகைகளையும் ருசித்துப் பார்த்தவன். பன்னிரண்டாம் வயதிலேயே பெண்கள் கற்பைச் சூறையாட ஆரம்பித்தவன். இன்னும் அதைவிடச் சிறுவனாக இருந்தபோது தன்னொடொத்த சிறுமிகளைத் தனியான இடங்களுக்கு அழைத்துச் சென்று அக்கிரமங்கள் பல புரிந்தவன் அவனிடத்திலுள்ள துஷ்டத்தனத்தாலும், குடி மயக்கத்தாலும் அவன் இருக்குமிடங்களிலெல்லாம் எப்போதும் கலகத்துக்கும், சண்டைகளுக்கும் பஞ்சமேற்படுவதில்லை. பதினைந்தாம் ஆண்டிலிருந்து அவனது அளவுக்கு மீறிய அக்கிரமங்கள் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கின.

இத்தகுப் பாதகனை யாரும் ஒன்றும் கேட்கவில்லையா? எப்படிப் பொறுத்தனர் இவன் செய்கையை என்று கேட்கிறீர்கள்! நல்ல கேள்விதான்.

இவனை ஒரு தெய்வீகப் பிறவியென்றும், இவன் ஒரு மாயா ஜாலக்காரன் என்றும் எண்ணி அந்த நாட்டு மக்கள் பயந்து ஒன்றும்செய்யாமல் இருந்தனர். இவனை அடிக்கச் சென்ற ஓரிருவரையும் தன் பார்வையால் அடிமைபடுத்திக் கொண்டான் இதைக் கண்டு பயந்தே போயினர் அவர்கள்!

மக்கள் பயப்படுவதறிந்து அவன் தன் விருப்பத்தை இன்னும் விரிவாக்கிக் கொண்டான். உல்லாசம் ஊக்க, உற்சாகம் பெருக, மெஸ்மரிஸ சக்தி துணைபுரிய, மாதர் ஆடல் என்னும் மகத்தான லீலைகளில் ஈடுபட்டான். நம் நாட்டுக் கண்ணன் கோபிகளிடம் லீலைகள் புரிந்ததாக, படிக்கிறோமே அந்தக் கண்ணன் "கிரிகரி"யிடம் பிச்சை வாங்கவேண்டும் பெண் லீலைகளில்! அந்த அளவுக்கு லீலைகள் புரிவான். உண்மையிலேயே "ருஷ்ய நாட்டுக்

கண்ணன்'' 'இரிகரி' என்ருல் பொருந்தும். உடலிலே உரமும், படிப்பின்மையும், மூடத்தனமும், மூர்க்கக் குணமும் கொண்ட இந்த மூடசிகாமணிக்கு இதைத் தவிர வேறு நல்ல வழிகளில் எப்படி அறிவு செல்லும்?

சட்ட விரோதம் சண்டையிடுதல், பொது மக்களே ஏசுதல் இவை போன்ற பல குற்றங்களுக்காக அவன் பலமுறை சிறைப்பட்டதும் உண்டு. பொய்யும் களவும் புரிந்து, சிறைதண்டனே அடைந்திருக்கிருன், இவன் வாழுள் சிறையிலேதான்'' என்று பலர் எண்ணினர்! ஆனுல் அது பொய்த்துவிட்டது!

ஊரூராய் அலேந்து திரியும் ''துங்கூலியன் வர்கத்தைச் சேர்ந்த நாடோடிப் பெண் ஒருத்தியை விலே கொடுத்து வாங்கி மணந்தான். பல குழந்தைகளேப் பெற்ருன். அவற்றில் பெண் குழந்தைகள் இரண்டு. அவன் தன் வாழ்க்கையை நடத்த ஒரு மாவரைக்கும் மில் நடத்திஞன். ஆனுல் அங்கு யாரும் வருவதில்லே. அப்படி யாராகிலும் வந்தாலும்,மாவரைப்பதை மறந்து குடித்துவிட்டு அவர்களுடன் கூத்தாடுவான்.

இப்படியாக இரவு பகல் தெரியாவண்ணம் தன்னுடைய அறிவுக்கு எட்டிய மட்டிலும், உடல் உரம் இடங் தந்தவரையிலும், குடித்தும், காமக்கூத்தாடிக் கொண்டும் வந்தான். இப்படியாக அளவுக்கு மீறிய அட்டூழியங்கள் செய்து வந்ததால், முப்பது வயது முடியும் முன்னமே, ஆண்மை இழந்தான். பின்பு என்ன செய்வதென்று யோசிக்கலாஞன். ஒருதடவையல்ல, பலமுறை சிந்தித்ததால் அவனுக்கு ஒரு நல்ல யோசனே உதயமாயிற்று. யோசனேயின்படி திட்டங்களேத் தீட்டிக் கொண்டான். அந்தத் திட்டங்களின் படிதான் தன் வேலேயைத் துவக்கிஞன். அதுதான் அவன் பிற்கால வாழ்க்கையாக அமைந்தது.

காட்டிலே வாழும் புலி, பசுவின் தோலேப் போர்த்துக்கொண்டு மாட்டு மந்தைக்குள் நுழைந்ததுபோல்,

ஒருநாள் திடீரென்று ஒரு மாதா கோயிலைச் சார்ந்த மடத்திற்குள் நுழைந்தான் அந்த நயவஞ்சகன்! பாமர மக்களை ஏமாற்ற, ஏய்த்துப் பிழைக்க, பயமுறுத்தி அடக்கி வைக்க, இதைவிட வேறு வழி கிடையாது என்பதை நன்குணர்ந்து விட்டான், ஒரு குருவின் தயவை நாடினான். அவரின் உதவியால் மடத்தில் சேர்ந்தான். நாள் முழுவதும் வேற்று விஷயங்களைச் சிந்திக்காமல், கிறிஸ்துவ மதக் கொள்கைகளில் ஈடு பட்டிருந்தான். காமக்கடலில் எவ்வளவு ஆழம் மூழ்கிக் கிடந்தானோ, மதுக்கிண்ணத்தின் மீது எவ்வளவு பற்று வைத்திருந்தானோ அவைப்போல பக்திக் கடலிலும் மூழ்கிக் கிடப்பதுபோல் நடித்தான். அவனைக்கண்ட பாமரர்கள், ஆவேசம் ஆடுவோர் பிரம்மித்து விடும்படி மதச்சம்பந்தமான விஷயங்களை எடுத்து விளக்குவான். அவர்களும் அவனின் ஆற்றலைப் போற்றலாயினர். தங்கள் உள்ளத்தில் இடந் தந்தனர். இதை யறிந்து அந்த வஞ்சகப் பாதிரி இன்னும் அதிகமாக மக்களை ஏமாற்ற தன் சேஷ்டைகளை அதிகமாக்கினான். திடீ ரென்று ஆவேசம் வரும். அதைக்கண்டு மக்கள் அவ னுக்கு மதிப்புத் தருவர். முட்டாள்களை ஏமாற்று வதற்கு இதைவிட வேறு வழியில்லை என்று எண்ணி உள்ளூர மகிழ்ந்தான். இன்னும் இந்த வேடத்தில் மன்னாதி மன்னர்களையும் ஏமாற்ற வேண்டும். அதற்குத் தன்னைத் தயார் செய்துகொள்ள வேண்டும், என்று தீர்மானித்துக்கொண்டான். அப்படிச் செய்ய அவ னுக்குக் கிடைத்த ஒரே ஒரு ஒப்பற்ற ஆயுதம், மதம்!

அந்த ஒரேவொரு ஆயுதத்தைக் கொண்டுதான் அவன் ஆயுள் வரை தன் எண்ணங்களை எல்லாம் ஈடேற்றிக் கொண்டான். திடீரென்று ஓர்நாள், தான் ஒரு வைதீக குருவாக மாறிவிட வேண்டுமென்று திட்டமிட்டான். சந்யாசிக் கோலத்தில் காட்சி அளித் தான். தன் தேகத்தையும் மனதையும் கண்டவர்கள் நடுநடுங்கும் வண்ணம் அடயோகப்பழக்கம் செய்து

வந்தான். இவன் அருந்தவம் கண்டு எல்லோரும் பிரமித்துவிட்டனர். அவன் தவம் செய்யும்போது சில சமயங்களில் சிறு சவுக்கினுல் தன்னுடைய முதுகில் ஓங்கி அடித்துக் கொள்வான். அப்படி அடித்துக் கொள்ளும்போது, 'பஞ்சேந்திரிய இச்சைகளுக்கு ஒரு சிறிதும் இடந்தரலாகாது! இடந்தரலாகாது!! என்று கூறிக்கொள்வான். அல்லும் பகலும் இப்படியே செய்து கொண்டிருந்ததால் அங்குள்ள மடங்களும், மாதா கோயில்களும் இவனுக்கு நடுங்கத் தலைப் பட்டன.

"நம்முடைய பாதிரியார் தன்னுடைய வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றிக் கொண்டார். கற்பழிக்கும் தொழிலை கனவிலும் இப்போது நினைப்பதில்லை. மதுவால் மயங்கிய அவர் மகானுகி விட்டார். புகை குடிப்பதும் கிடையாது பரிசுத்த தன்மையை அடைந்து விட்டார்" என்று மக்களும் மடாதிபதிகளும் நம்பினர்.

இவனுக்கு குருவாய் இருந்த பாதிரியார் எல்லா வித உதவியும் செய்யலானுர். எழுதப் படிக்கத் தெரியாத இவனுக்கு அந்தக் குறையையும் போக்கி வைத்தார் என்ருல், அவர் செய்த உதவி எத்தகையது என்பது விளங்கும். இப்போதெல்லாம் வெறும் தவசியாக மாத்திரம் இல்லாமல் பைபிளும் கையுமாக இருப்பான். அன்ன ஆகாராதிகளை மறுப்பான், பகலில் சிறிது பால் மாத்திரம் அருந்துவான்; இரவில் ஒன்றுமே உட்கொள்ளாமல் நோன்பு இருப்பான். வரவர அவன் பேசுவதையும் குறைத்துக்கொண்டே வந்தான். கடைசியாக மௌன விரதத்தை மேற்கொண்டான். யாருக்கும் பேட்டித் தருவதில்லை. அவனைக் காண்பதே மிகவும் கடினமாகிவிட்டது. பாதிரிமார்கள்கூட சுலபத்தில் நெருங்க முடியாத நிலைமையை உண்டாக்கிக் கொண்டான். அவனின் உருவத்தையும், ஒழுக்கத்தையும் கண்டு அப்பகுதிகளில் திகில் கொள்ளாதவர்

எவருமில்லை. இவன் ஏசுவின் இரண்டாம் அவதாரம் என்றே கருதலாயினர்.

மதப்பிரசாரம் செய்வதற்கு வெளியே கிளம்பு வான். அவனது நீண்ட அங்கியும் அவனுக்கென்று அமைந்த தாடியும், மக்களின் மனதில் பயத்தை உண்டுபண்ணும். மதப்பிரசாரம் செய்யும்போது மத சம்பந்தமான காரியங்களுக்குப் பொருள் தேவை என்பான். அவ்வளவுதான். அந்த கூட்டத்திலுள்ள அனைவரும் ஏன் என்று கேட்கவே மாட்டார்கள். தங்களிடமுள்ள பொருள்கள் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டு பரமதிருப்தியுடன் வீடு திரும்புவர். ஒருவர் என்ன பணிக்கு என்று கேட்கலாமென கருதி அவன்மீது பார்வை செலுத்திஞல் உடனே தான் கேட்க இருந்ததை மறந்துவிட்டு பையில் இருக்கும் பணத்தை அவன் பாதத்தில் கொட்டிவிட்டு வருவர். காந்தம் ஊசியைத் தன்னிடம் இழுக்கும் சக்தியைப் பெற்றிருப்பதுபோல் இந்த வஞ்சகப் பாதிரி பாமர மக்களின் மனதைத் தன் பார்வையால் இழுக்கும் சக்தி பெற்றிருந்தான்.

இதோடு நின்ருன் இல்லை. அவன் நோக்கம் பெண்கள் கூட்டத்தின்மீது பாய்ந்தது. ஆகவே, நோய்களை நீக்கவும், பேய்களை ஓட்டவும் தலைப்பட்டான். இதஞல், அவன்பால் பெண்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது. அத்துடன் அவன் கௌரவமும், கண்ணியமும் பெருகத் தொடங்கியது. சில தினங்களில் இந்தப் பாதிரியால் குணமடையாத வியாதிகள் ஒன்றுமே இல்லை என்று அங்குள்ள பெண்கள் பேசிக்கொள்ளலாயினர்.

அவன் ருஷ்யமொழி பேசுவதில் அதிகப் பாண்டித்தியம் அடைந்தான். அதே மொழியைப் பேசியே பல குடும்பத்தினரைத் தன் வயப்படுத்தி இருக்கிருன். கண்ணிஞல் சிலரை அடிமைப்படுத்துவான். சிலரை

தன் உருவத்தைக் காட்டியே மயக்குவான். சிலரை பேசியே தன் வயப்படுத்துவான். வியாதிகளைப் போக்கியே சிலரைச் சிறைபிடிப்பான்,

இப்படியாக இவன் புகழ் சுற்றுப்புற ஊர்களில் பரவவே அங்குள்ள பாமர மக்கள் இந்த ஏசுவின் இரண்டாம் அவதாரத்தைக் கண்டுசெல்ல ஆண்களும் பெண்களுமாக வந்து குவிந்துகொண்டே யிருந்தனர். அதைவிட அதிகமாக அவன் மதத்தின் பெயரால், வசூலித்துக்கொண்டிருந்த பொருள் வந்து குவிந்து கொண்டே இருந்தது.

"இவ்வுலகம் வஞ்சனையால்தான் நடைபெறு கிறது. ஆகவே, இவ்வுலகினரை இயன்ற அளவு வஞ்சனையாலேயே ஏமாற்ற வேண்டும்" என்பது அவன் முடிவான எண்ணம். அதனுல்தான் அவன் வஞ்சகச் செயலில் ஈடுபடத் துணிவு கொண்டான். "பொய்யும் புளுகும், கோளும் குறும்பும், களவும் கொள்ளையும், வஞ்சனையும் சூதுமே இவ்வுலகில் நிரந்தரமானவை" என்று அவன் கருதி வந்தான். ஆகவே, சமய சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு எதிரிக ளிடம் நடப்பதில், சூழ்ச்சிகள் செய்வதில் இவனை ஒப்பாரும் மிக்காரும் ருஷ்யாவில் இல்லை. இவனைப் போல் மதத்தின் பெயர் சொல்லி பணம் திரட்டியவர் கள், அப்போது இவனைத்தவிர உலகில் வேறு எவரும் கிடையாது.

தன் வசம் உள்ள அப்பெரும் நிதித்திரளைத் தைரியமாகத் தன் சொந்த உபயோகத்திற்கே செலவு செய்யலானுன். தன் சிறிய வீடு இருந்த இடத்தில் பெரியதொரு அரச மாளிகையைக் கட்டி முடித்தான். அந்த மாளிகையில் சகல அரச போகங்களும் தட்டுத் தடையின்றி நுகர்ந்து வந்தான். "பீட்ரோ நாவஸ்காய்" என்னும் இடத்தில் பல மாளிகைகளை எழுப்பினுன். அவனுக்கென்று அமைக்கப்பட்ட அற்புத மாளிகை

யொன்றில் ஐந்து அறைகளை அவனின் மனைவி மக்க ளுக்காக ஒதுக்கி யிருந்தான். ஆனால் பன்னிரண்டு அறைகளுக்கு மேல், கன்னிப்பெண்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தான். அந்த அறைகளில் கன்னிப் பெண் களும் இருந்தனர். அதில் மூத்தவளுக்கு வயது இருபத்து ஏழு.

"கன்னியர்கள் என்பவர்கள் கடவுளிடம் கொண்ட பக்தியின் முதிர்ச்சியால் தங்களுடைய ஆசைகள் அனைத்தையும் ஒழித்துவிட்டு, சந்யாசக் கோலத்தை வலிய மேற்கொண்டு "ஆண்டவனோடு இரண்டறக் கலப்பவர்கள்" ஆனால், இந்தப் ரோதிரியிடம் சிக்கிய கன்னியர் கடவுளுக்குப் பதில் பாதிரியிடமே ஐக்கியப் பட்டு இரண்டறக் கலந்து வந்தார்கள். கர்த்தரை நாடி வந்தவர்கள் காஷாயம் பூண்ட கயவனின் கரத் தைப் பற்றினர். இவர்கள் மாத்திரம் அல்ல; வேறு எவர் வந்தாலும் இப்படிச் செய்விப்பதில் மிக்கத் தேர்ச்சிபெற்று விளங்கினான் 'கிரிகரி' என்ற இப் பாதிரி!

நட்சத்திரங்கள் மட்டும் விண்ணிலே கண்சிமிட்டிக் கொண்டிருக்கும். காரிருள் உலகைக் கவ்விக்கொண் டிருக்கும்- இந்தக் காலத்தைப் பாதிரியார் எதிர் பார்த்துக்கொண் டிருப்பார் கொள்ளைக்காரர் கொலை புரிவோர், கன்னமிடுவோர் களவு செய்வோர் "வருக, வருக!" என்று வரவேற்கும் அந்த நல்ல நேரத்தை தான் இந்த வஞ்சகப் பாதிரியும் எதிர்நோக்கிக்கொண் டிருப்பான். அந்தக் காலம் வந்தவுடன் கருமேகத்தைக் கண்ட கானமயில்போல் களித்து, "புறப்படுங்கள்- தோழர்களே, புறப்படுங்கள்! பாழும் பொழுது புலர்ந்துவிடப்போகிறது; பாவம் செய்யப் புறப்படுங் கள்!" என்று கட்டளையிடுவான். அந்த மாளிகையிலே உள்ள ஆண்கள் பெண்கள் கன்னிப்பெண்கள் அத்தனை பேரும் புறப்படுவார்கள் கானகத்தை நோக்கி! காட்டி லிருந்து நடு இரவில் நாட்டிற்கு வருவர் கள்வர். ஆனால்

நள்ளிரவில் நாட்டிலிருந்து காட்டிற்குச் செல்கிருன் கள்ளனிலும் கொடிய இக்காஷாயம் தரித்த காமுகன் தன் பரிவாரங்களோடு! காட்டை அடைந்தவுடன் கட்டைகளைச் சேர்த்துத் தீ யுண்டாக்குவார்கள். அதன் மத்தியில் திரிசூலம் போன்ற கருவிக்கு மேல் ஒரு அகல்போன்ற பாத்திரம் ஒன்றில் சூடம், சாம்பிராணி, குங்கிலியம் போன்ற வாசனைத் திரவியங்களைப் போட்டு புகை உண்டாக்குவார்கள். பின்னர் அந்த அக்கினி குண்டத்தைச் சுற்றி ஆண்களும், பெண்களும் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் மாறிமாறி கைகோத்துக் கொண்டு சுற்றிசுற்றி களியாட்ட மாடுவார்கள். அப் போது "நம்முடைய பாபம் மன்னிக்கப்படும். அது பட்சாதாபத்துக் கென்றே சிருஷ்டிக்கப்பட்டது. ஆகவே, பாபம் செய்யுங்கள்! பாபம் செய்யுங்கள்! எங்கள் பாவம் கழிவிரக்கத்திற்காக சிருஷ்டிக்கப் பட்டது" என்ற ஒரு பல்லவி எழும். உடனே அனை வரும் உரக்க கூவிக்கொண்டே ஆடுவர். முதற்குரலை எழுப்பியது அந்த வஞ்சகப் பாதிரிதான்! இப்படி ஆடிக்கொண் டிருக்கும்போதே திடீ ரென்று தீ அணைந்துவிடும்; உடனே உண்டாகும் பேரிருளில் "நும் இந்திரிய நுகர்ச்சிகளை அனுபவிப்பீர்களாக" என்ற ஒலியை எழுப்புவான் அந்தப் பாதிரி. உடனே எல்லோரும் கீழே சாய்ந்து விழுவர். அவ்வளவுதான்! ஆபாச லீலைகள் நிகழும். இந்தப் பூசையைத்தான் அவன் செய்து வந்தான். இவ்வளவோடு நிற்கவில்லை.

ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து பெற்ருேராலும், சுற்றத்தாலும், நல்ல பெயரெடுத்த ஓர் இளம் பெண், இந்தக் காமுகப் பாதிரியின் பிரசங்கத்தைக் கேட்டு விட்டு அவனையே பின்பற்றத் தொடங்கினுள். பெற் ருேர், மற்ருேர் அவளைத் தடுத்தும் அவர்களை மதியா மல் பாதிரியின் கன்னிகா பெண்ணுகிவிட்டாள். ஒரு நாள் அவளும் பாதிரியும் முதல் வகுப்பு ரயில் பிர யாணம் செய்தார்கள். அப்போது கர்த்தரைப் பற்றி

யும், மற்ற விஷயங்களைப் பற்றியும், அதிக ஊக்கத்துடன் அவள் கேட்டுத் தெரிந்துகொண் டிருந்தாள். திடீரென்று பாதிரி அவளை நோக்கினுன். பிறகு கழுத்தின்மேல் கையைப் போட்டான். அணைத்து முத்தமிட்டான். அது மாத்திரமல்ல செய்ய வேண்டியவைகள் அனைத்தும் செய்தே விட்டான்! பிறகு அவள் "இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டதற்கு "உன் பாபத்தைப் போக்கிவிட்டேன்" என்ருன்.

அன்று முழுவதும் மனசாந்தி அடையாத அந்தக் கன்னிப்பெண் அன்று மாலையில் அவனை நோக்கி "கிரிகரி எபிமோவிட்ச்" இன்று நாம் செய்தது ஒரு பாபமான காரியமல்லவா?" என்று கேட்டாள். அதற்கு அவன் "என் அருமைக் குழந்தாய்! அஃதொன்றும் பாபமாக கருதப்படமாட்டாது. நம்முடைய சரீரமானது அந்தக் கர்த்தரால் அருளப்பட் டிருக்கிறது. நம் இருவர் உடலிலுள்ள மாம்சம் (தசை) அவருடையதுதான். ஆகவே, மாம்சத்தை மாம்சத்துடன் இணைத்துத் தேய்த்து இந்திரிய சுகம் அனுபவிப்பதில் என்ன பாபம் இருக்கிறது" என்று புன்சிரிப்புடன் விடையளித்தான்.

* * *

இந்த வஞ்சகனைப்பற்றி ஒரு கன்னிப்பெண் கீழ்வருமாறு கூறியிருக்கிருள்:—

"ஓர் ஆறுமாத காலம் வரையில் இரவும் பகலும் நான் கனவு கண்டுகொண்டே யிருந்தேன். இந்தப் பிசாசின் திகிலானது என் மனதை விட்டு ஒருபோதும் விலகினதே இல்லை. பாதிரி 'கிரிகரி' என்பவன் உண்மையில் ஒரு வைதீகப் புருஷனு? அல்லது பொல்லாத துஷ்ட தேவதையா? என்பதை நான் நிதானித்துக் கொள்ளமுடியவில்லை. இவனுடைய கன்னியாமடத்திற்குள் நான் வகை தெரியாமல் சிக்கிக்கொண்டேன். ஆனுல் அதைவிட்டு வெளிவர சக்தியில்லை. இந்தப்

பொல்லாத பட்டணத்தில் நான் ஒளிந்துகொண்டிருக்கக்கூடிய இடம் ஒன்றும் இல்லை. இங்கிருந்து ஓட்டம் பிடித்துவிடலாம் என்று எண்ணினேன். "பிட்ரோகிராடு"க்குத் திரும்பிச் செல்ல நாட்டங்கொண்டேன். ஆனால் அதைச் செய்ய எனக்கு முடியவில்லை. ஏனெனில் எனக்கு அச்சமாய் இருந்தது. அவனை நினைத்த மாத்திரத்தில் அளவுகடந்த திகிலுண்டாய் விடுகிறது. அவனுடைய கூரிய பூதக் கண்கள் என்னைப் பயமுறுத்தி ஆட்டி மயக்கிவிடுகின்றன. என்னை அவன் ஒருமுறை நோக்கிவிடுவானாயின், அவனுடைய ஆழ்ந்த பார்வையானது, என்னுடைய ஆத்மாவின் ஆணிவேர் மட்டும் ஊடுருவிச் செல்வதேபோல் எனக்கு மயிர்க்கூச்செறிவது வழக்கம். இதனால் எனக்குண்டாகும் திகிலுக் கோர் அள வில்லாமற் போய்விட்டது. இந்தப் பூதக் கண் படைத்த பிசாசை விட்டு நான் ஐயாயிர மைல்தூரம் விலகிச் சென்ற போதிலும், அப்பொழுதும் இவன் என்னைச் சூழ்ந்து கொண் டிருப்பதே போன்ற அச்சமே எனக்கு மேலிட்டு நிற்கும். இவ்வுலகிலுள்ளதீமைகள் அனைத்து மோர் உரு வெனக் கொண்டதே இவன் உருவம் என்று நான் நினைக்கின்றேன்."

இதுபோல பல பெண்களின் சாபங்களுக் கிறை யானவன் இவன்!

ஆறடிஉயரமும், காமாந்தக்காரக் கண்களும், நீண்ட கரடு முரடான கம்பளியாலான அங்கியும் அணிந்துக் கொண்டு எளிய பாவனையில்தான் இருப்பான். அவனது தாடியும், மீசையும் ஏசுநாதருக் கமைந்தது போலவே அமைந்திருப்பதாகவே பிறரிடம் சொல்லிக்கொள்வாள். மக்களும் உண்மை என்று நம்பினர். தன்னுடைய ஆற்றல் எவ்வளவோ அதைவிட பல ஆயிர மடங்கு அதிக மான ஆற்றல் தன்னிடம் உள்ளதாக மக்கள் கருதி ஏமாறுவதையும் நன்கு அறிந் திருந்தான். தன்னால் ஒன்றும் செய்ய முடியாது ஆனால், தன்னை ஏசுவாகவே

கருதுகின்றனர் என்பதை சந்தேக மற உணர்ந்து விட்ட தால் அவன் அதற் கேற்றவாறே நடந்து வந்தான். இந்த வஞ்சகப் பாதிரி தன்னுடைய சக்திகளை ஆண்— பெண் என்ற இரு பாலரின்மீதும் சமமாகவே வீசிய போதிலும், பெண்களே அவனின் வஞ்சச வலையில் அதிகமாக வீழ்ந்தனர். நாளுக்கு நாள் 'கிரிகரி' என் னும் பாதிரியின் அரண்மனையில் கன்னிகா ஸ்திரீகள் அதிகமாகிக் கொண்டே வந்தனர்.

பல இடங்களுக்கு இவன் பிரசாரத்திற்காகப் போகத் தலைப் பட்டான். எனவே அவன் புகழ் நீண்டு பரவ லாயிற்று. 'கஸான்', 'ஸமார', 'கீவ்' முதலிய இடங்களில் அவன் புகழ் மிக அதிகமாகப் பரவியது. அங்குள்ள பெருவாரியான மக்கள் அவனின் சீடர்க ளாயினர். "ஏசுவை நாம் கண்ட தில்லை. ஆனால், இந்த மகான்தான் ஏசு. இவரைக் காணும் பாக்கியம் பெற்றோம்" என்று மகிழ்ந்து உண்மையான ஏசுவிற்குச் செய்யும் பூசையை விட அதிகமாக இவனுக்குச் செய்து மகிழ்ந்தனர் அந்த முட்டாள்கள்! கிரிகரி பாதிரிக்கு புக ழும் பெருமையும் வளர்ந்து கொண்டே வந்த அந்த நேரத்தில், ஒரு மூலையி லிருந்து எதிர்ப்பும் கிளம்பியது. முதலில் தைரியமாக அந்த எதிர்ப்பை உண்டாக்கியவள் ஒரு பெண்! அவள் "கஸானை"ச் சேர்ந்தவள் அவள் மிகவும் தைரியமாக, விளக்கமாக "கிரிகரி" செய்யும் பல குற்றங்களை எழுதி "தியபான்" என்னும் கிருத்து வப் பெரிய ஆண்டவரிடம் கொடுத்தாள். அதனால் அவனுக்கு யாதொரு தீமையும் விளையவில்லை. "தியபான்" கிரிகரிக்கு மிகவும் வேண்டியவன். ஆகவே, அந்தக் குற்றச் சாட்டுகளை ஏற்றுக் கொள்ள வில்லை. அதற்குப் பதிலாக 'கிரிகரி'யை 'பீட்ரோகிரா'டுக்கு அழைத்துச் சென்று தன்னுடைய ஆதரவில் வைத்துப் பெருமை படுத்தி அனுப்பி வைத்தார்.

அந்தப் பெண் எழுதிய குற்றச்சாட்டுகளில் ஒன்று:- "ஒரு நாள் இவன் என் பதினாறு-இருபது வயதுடைய

இரு பெண்களுடன் குளிக்கும் விடுதியி லிருந்து வெளிப் போந்து தெருவில் வருவதை நான் க்ண்டேன். உடனே எனக்குத் திகி லுண்டாயிற்று. அப்படி அவர்கள் குளிக் கும் விடுதியி லிருந்து ஒருமித்து வருவதன் கருத்து இன்ன தென்பதை நன்கு தெரிந்து கொண்டேன். உடனே, அவர்கள் முன் சென்றேன். ஆத்திரம் அதிக மாகப் பேச வாயெடுத்தேன் அவ்வளவுதான் அவன் தன் கொடிய பாாவையால் என்னை உற்றுப் பார்த்தான். என்னால் பேச முடிய வில்லை. பின்னர் 'கிரிகரி' என் பெண்களை நோக்கி "அருளொளியானது உங்கள் தாய் மீதும் இறங்குகின்றது'' என்று ஏளனமாகச் சொன் னான்'' என்பது.

அந்தப் பெண்ணின் வழக்கை 'தியபான்' கவனி யாமல் போகவே மீண்டும் அந்த தியபானுக்குக் கடுமை யான ஒரு கடிதம் வரைந்தாள். அதன் சுருக்கம்:- "பரிசுத்த ஆண்டவராகியத் தாங்கள் 'கிரிகரி' என்னும் பைசாசத்துடன் நட்பு கொள்வதன் காரணம் நான் அறிந்து கொள்ள முடிய வில்லை'' என்பது இப்படியே பல கடிதங்கள் வந்தும் அந்தப் பெரிய பாதிரி கவனிக்க வில்லை. அதனால் எதிரிகள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து அவன் வழக்கை விசாரணைக்குக் கொண்டு வந் தாக வேண்டும் என்று வற்புறுத்தினர். இதை அறிந் தக் 'கிரிகரி' யின் சீடர்கள் "எங்கள் குரு தேவரையா குறை கூறுகிறீர்கள்! அது உங்களால் முடியுமா? அவர் குற்ற மற்றவர் அல்லவா? இதில் உங்களுக்கு சந்தேக மாயின் நாங்கள் தீயிலே மூழ்கிக் காட்டுகிறோம்! நீரின் மீது நடந்துக் காட்டுகிறோம்.'' என்றெல்லாம் வாதாடி னர். அவர்கள் என்ன சொல்லியும் எதிரிகள் கேட்க வில்லை. வழக்கை விசாரணை செய்யத்தான் வேண்டும் என்று பிடிவாதம் செய்தனர்.

கடைசியில், ஒரு நடு நிலமையான நியாய விசாரணை செய்ய வேண்டும் என்று ஒரு வைதீகக் கோர்ட் நியமிக் கப் பட்டது. அந்தக் கோர்ட்டில் ஒரு பிஷப் பாதிரி

யாரும், ஒரு சங்யாசப் பாதிரியாரும், கண்ணியம் வாய்ந்த மேற் குலத்து மனிதர்கள் மூவரும் ஆக ஐவர் நீதிபதிக ளாக நியமிக்கப் பட்டனர்.

கிரிகரி வந்தான்; தான் குற்றவாளி அல்ல என் பதை அவர்கள் முன் காட்டி விட்டான். பின்னர், அந்த ஐவரும் அவனை மிகவும் கண்ணியத்துடன் விடு தலை செய்து விட்டனர். அந்த அளவுக்கு செல்வாக்கு பெற்றிருந்தான் 'கிரிகரி'. பின்னர் கேட்க வேண்டுமா? பாதிரி தம் பாதகங்களை அதிகமாக்கிக் கொண்டு வெளிக். கிளம்பினான். விடுதலைக்குப் பின் அவன் புகழ் இன் னும் நீண்டு விரிவடைந்தது. ரோம நாட்டுப் போப் பும் "கிரிகரி"யின் செல்வாக்கைக் கண்டு பொறாமை அடையும் அளவுக்கு ஆடம்பரங்கள் இவனுக்கு நிகழ்ந்தன.

அவன் பரிசுத்தவான் என்று பகிரங்க விசாரணை யில் தீர்மானிக்கப் பட்ட பின், அவன் ஒழுக்கத்தில் உயர்ந்தவனாகக் கருதப் பட்டான். ஆகவே, அதிகார மும், ஆதிக்கமும் நாளுக்கு நாள் உயர்ந்தன. இனி இவனை அசைப்பவர்கள் யாரும் இல்லை எனவே இவன், இது வரையில் புரிந்து வந்ததைவிட தீமை கள் புரிய, மக்களை ஏய்க்க, பெரிய திட்டம் ஒன்றை தீட்டிக் கொண்டு "கிரிகரி எபிமோ விட்ச்" தனக் கிருந்த பெயரை மாற்றிக் கொண்டான் "ரஸ்புடீன்" என்று தன்னை அழைக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான்.

"ரஸ்புடீன்" என்பதற்கு "காமாந்த காரன்" துன் "துன்மார்கன்" என்பது பொருள். இப்படிப் பொருள் தரும் அந்தப் பெயரையே தன் சொந்தப் பெயராக வைத்துக் கொண்டான் என்றால், அவனுடைய உள்ள உரத்தை என் னென்பது!

"ரஸ்புடீன்" என்பதற்கு வேறு பொருளும் உண்டு அது "ஜெயிக்க முடியாதவன்" என்பது. இப் பெய

ரும் அவனுக்குப் பொருந்தும். காமாந்த காரத்தில், துன்மார்க்க செய்கைகளில் அவனை வெல்வார் எவரும் ருஷ்யாவில் மாத்திரம் மல்ல உலகிலேயே கிடையாது!

"ஏன் இப்படிப் பெயரை மாற்றிக் கொண்டீர்" என்று யாராவது கேட்டால், "வைதீகக் கோர்ட்டார் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வழக்கில், வெற்றி அடைந்தமையால், வெற்றிக்கு அறிகுறியாக இப்பெயர் சூடிக்கொண்டேன்" - என்று கூறிவிடுவான்.

பெயர் மாற்றிக் கொண்ட பிறகுதான் ரஸ்புடீனின் பெயர் எல்லா இடங்களிலும் நன்கு பரவி விட்டது. அவனை நகரத்திற்குள் அழைப்பதற்காகப் பல அழைப்புக்கள் வந்து கொண்டிருந்தன. நாளுக்குநாள் கோடீஸ்வர கோமான்கள், அவர்களிடம் கொஞ்சி விளையாடும் வஞ்சிகள். பாதிரிமார்கள், பட்டம் தாங்கிகள் அமைச்சர்கள்-ஏன் அரசக் குடும்பத்தினர் அரசன் ஆகிய எல்லோருடைய அழைப்புக்களும் ஒரு முறையல்ல பல முறை வந்து வற்புறுத்தின. அவை மாத்திரமல்ல. பெரிய ஆண்டவன், எனப் புகழும் "தியபானும் வற்புறுத்தினர்.

இவ்வளவு பேர் அழைத்த பிறகுதான், அந்த நஞ்சினும் கொடிய வஞ்சக வடிவினன். ரஸ்புடீன் நகருக்குள் நுழைய இசைந்தான்! அவன் நுழைந்த அன்றுதான் தொடக்கத்தில் கூறியபடி, மாதர்களும் மக்களும், மற்றவரும் அவனை வரவேற்கக் கூடினர் விழாக் கொண்டாடினர்.

இப்போது புரிகிறதா தோழர்களே! வரவேற்பு யாருக்கு என்று! பதினாயிரம் "கோபிகா ஸ்திரீகளுடன் கூடிக் குலவி, அவர்கள் குளக்கரையில் குளிக்கும்போது கோபாலன் வந்து கோபிகைகளின் சேலைகளைத் திருடி புன்னை மரத்தில் அமர்ந்து கொண்டு புல்லாங்குழல் ஊத, சேலையைக் காணாது சேல்விழியர் விழிக்க, வேணுகானன் விளையாட்டுப் புன்னகையுடன், "பூவையீர்

நீவீர் நிர்வாணமாய் நின்று இருகைகூப்பி எம்மைத் தொழுவீராஞல் சேலைகளைத் தருவேன்'' என்று கூறி சிரிக்க, கோபியரும் அங்ஙனமே செய்ய, கோபாலன் கண்டு மகிழ்ந்தான்'' என்று நம் இதிகாசங்களில் படித்தபிறகும், கோபாலனைக் கடவுளென்று கைகூப்பித் தொழும் மக்கள் இங்கே இன்னும் இல்லையா? அது போலவேதான் ருஷ்யநாட்டில் ''ரஸ்புடீனை''யும் இரண்டாம் ஏசுவாக மதித்து மரியாதைக் காட்டி வந்தனர்.

ரஸ்புடீன் ருஷ்யாவின் தலை நகரில் புகுந்தபோது ருஷ்ய நாடு எப்படி இருந்தது என்பதை நாம் அறிதல் வேண்டும்.

ருஷ்யநாட்டு வரலாற்றின் கடைசி அரசஞன ஜார் மன்னன் ஆண்டு வந்தான். அவனின் ஆட்சியில் ருஷ்ய நாடு நோயுற்றிருந்தது; நாட்டில் மக்கள் பஞ்சத்தாலும் பட்டினியாலும் பரதவித்தனர். ஏழைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர் அவர்களுக்கு வாழ்வு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையே இல்லாமல் இருந்தது. தொழில் புரிபவர்கள் மிக மிக கேவலமாக நடத்தப்பட்டனர். அந்த அளவுக்கு மக்களை மதியாத ஆட்சி நடந்துகொண்டிருந்தது. ஆஞல், அந்த நாட்டுப் பணக்காரக் கும்பலுக்கு மாத்திரம் சகல வசதிகளும் நிரம்பி இருந்தன. அவர்கள் எதைச் செய்தாலும் சட்டம் அனுமதிக்கும். ஆஞல், ஏழை சட்டத்திற்குட்பட்ட எதைச் செய்தாலும், ஒரு பணக்காரன் அது தவறு என்ருல், தவறு தான். கேவலம் துஷ்ட மிருகங்களைக் காட்டிலும் கீழ்த் தரமாக மக்களை மதித்து வந்தது ஆணவம் பிடித்த அந்தப் பணக்காரக் கும்பல்!

ஜார் மன்னன் நாட்டின் நலனைக் குறித்து கடுகளவும் கவலை கொள்ளாது மந்திரவாதிகளையும், மதவாதிகளையும், பூசாரிகளையும் அழைத்து, அடிக்கடி அவர்களிடம் உரையாடி, அவர்களுக்கு வேண்டியவையெல்லாம் செய்து மகிழ்வான். ஏன் அப்படி செய்கிருன்

என்றால், அவன் "இறந்த உயிர்களிடம் பேசவேண்டும்" என்ற பித்துக் கொண்டிருந்தான். ஆகவேதான் புதுப்புது மந்திரவாதிகளையும் மதவாதிகளையும் அழைத்து வந்து இறந்த மன்னர்களது ஆவிகளுடன் பேச ஆவல் கொண்டானே அல்லாது, நாட்டைக் கவனிக்க நாட்டம் கொள்ளவில்லை.

அரசன்தான் அப்படி என்றால் அவன் மனைவி 'ஜாரினா'வும் அந்த வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். அரசனையும் அரசியையும் மந்திரவாதிகள் மத்தியில், மதவாதிகள் மத்தியில், பாதிரிகளின் பக்கலில் பார்க்கலாம். அன்றியும், சிங்காரச் சீமாட்டிகள் சீமான்களுடன் விருந்து மண்டபங்களில் காணலாம். அந்த இடங்களில்தான் விருப்பத்தோடு அரசனும் அரசியும் வீற்றிருப்பர். அவர்களுக்கு நாட்டைப் பற்றி கவலை நேர்வதில்லை. இத்தகு நிலைமையில்தான் நம்முடைய 'ரஸ்புடீன்' படையெடுத்தான் தலைநகருக்குள்.

அங்கு அவன் பிரவேசித்தவுடன், அவனின் வலையில் முதன் முதலில் வீழ்ந்தவள் பெரிய பணக்காரச் சீமாட்டியொருத்தி. இவள்தான் பெரிய பெரிய இடங்களுக்கெல்லாம் ரஸ்புடீனை அறிமுகப்படுத்தி வைத்தாள். இதன் காரணமாகவே ருஷ்ய நாட்டின் பெரிய பெரிய சீமாட்டிகள் அவன் வசமாயினர்.

பல பெருங்குடி பெண்களுக்கு முன் பாதகன் ரஸ்புடீன் "பெண்குலதிலகங்களே! தேவன் என் இடத்தில் தம்முடைய தெய்வீகச் சத்தியை நிரப்பியிருக்கிறார். எனவே, என் மூலமாகத்தான் எல்லோருக்கும் 'அருள்' கிட்டுதல் கூடும்! இத்தகைய 'அருள்' வேண்டுவோர் என்னுடன் ஸ்தூலத்திலும், சூக்குமத்திலும் சம்பந்தித்து ஐக்கியமாயிருத்தல் வேண்டும். ஆகவே என்னிடத்தில் உண்டாகும் ஒவ்வொரு செய்கையும் தேவனுடைய அருட் பிரகாசமாகவே யிருக்கிறது. ஆதலின், அஃது அனைவரின் பாபத்தையும் போக்குகிறது" என்று

கூசாமல் கூறுவான். இதை அப்படியே உண்மை என்று நம்பி, சீமாட்டிகளும் சிங்காரிகளும் விலை மதிக்க முடியாத கற்பை இழந்தனர். ஸைபீரியா பாலை நிலத்தில் கீழ்த்தரமான, நாகரிகம் தெரியாத குடியானவனின் மகன், அரச பரம்பரையைச் சேர்ந்த அழகிகளை அணைத்து மகிழ்கின்றான் என்றால் மதப்பற்று மக்கள் அறிவை எவ்வளவு மட்ட ரகத்தில் கொண்டுபோய் விடுகின்றது! இத்தகு மதம் இருக்கலாமா?

ரஸ்புடீன் ருஷ்ய மன்னன் மாளிகையில் நுழைந்த சமயத்தில், ருஷ்ய—ஜப்பான் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அது மாத்திரமல்ல உள்நாட்டுக் குழப்பங்களும், வெளிநாட்டுக் குழப்பங்களும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தன. ருஷ்ய நாடு முழுவதும் அரசனுக்கெதிராக வேலை செய்து கொண்டிருந்து, அந்த நேரத்தில் மன்னன் ஜாரும், அவன் மனைவி ஜாரிணாவும் தங்களுடைய ஜாதகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தனர். இன்னும் எவ்வளவு நாள் அரசு நிலைக்கும், அவர்கள் உயிர் நிலைக்கும் என்பதைப்பற்றி! அரண்மனைக்குள்—ஏன்? அந்தப்புரங்களிலும் அடிக்கடி அதிபயங்கரமான கடிதங்கள் கிடைக்கும். அரசனும் அரசியும் தங்கள் உயிரைப் பாதுகாக்க அரண்மனையிலேயே ஆள் இல்லாமல் விழித்துக்கொண்டிருந்தனர். இந்த நெருக்கடியான நேரத்தில் இளவரசருக்குரிய குழந்தையும் நோய்வாய்ப்பட்டிருந்தது. இத்தகுப் பயங்கரச் சூழ்நிலைகளில் சிக்கிய மன்னர் தம்பதிகள் மருண்டனர். அடுத்த வினாடி என்ன நேருமோ என்று தெரிந்து கொள்ள முடியாமல் உயிருக்கே மன்றாடி மனந் தாளாத் துயரக்கடலில் மனமுடைந்து மூழ்கிக் கிடந்தனர்.

இந்தச் சமயத்தில்தான் 'குழந்தையின் நோயை நீக்க வஞ்சக ரஸ்புடீன்! அரச மாளிகைக்குள் நுழைந்தான் அவ்வளவுதான் அங்குள்ள அனைவரையும் மயக்கித் தன் வஞ்சக வலையில் வீழ்த்திக் கொண்டான்.

முதன் முதலில் 'ரஸ்புடீன்' அந்தப் புரத்தின் க்ஷேமத்திற்காக மந்திரம் ஜெபிக்கும் பாதிரியாக நிய மிக்கப் பெற்ருன். அவன் அந்த வேலையில் ஈடுபட்ட சில தினங்களில் "ஜாரோவிட்ச்" என்னும் அரசிளங் குமரனுடைய உடலும் நாளுக்குநாள் குணம் அடைந்து வந்தது; கலகங்களும் சற்று அடங்கி யிருந்தன. இந்த காரணங்களால் ரஸ்புடீனின் புகழ் மணக்கலாயிற்று; அன்றியும் ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. அதாவது ரஸ்புடீன் அரண்மனையில் இருக்கும்போது அரசிளங் குமரனின் உடல் நலமுற்றும், ரஸ்புடீன் பிரசார நிமித் தம் வெளியில் செல்லும்போது, வியாதி முற்றியும், இருக்கும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு எல்லோரும் வியப்படைந்து "பாதிரியார் அருகில் இருப்பதால் தான் உடல் நல முற்றுள்ளதே யொழிய, மருந்தாலல்ல. ஆகவே, மகா சக்தி வாய்ந்த பாதிரியார் அரசிளங் கும ரனை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும்" என்று கூறிக் கொண்டனர். இத்தகு சிறு நிகழ்ச்சிகள் எல்லாம் மக்களின் கவனத்தை ஈர்த்து, ரஷ்புடீனின் மகிமையை யும் மகத்துவத்தையும் வளர்த்து வந்தன!

ஜார் மன்னன் ரஸ்புடீனை நோக்கி "தங்களுக்கு இவ்வளவு பெரிய தெய்வீகச் சக்தி எங்கிருந்து கிடைத் தது என்று கேட்டான். உடனே ரஸ்புடீன் 'அரசே கேள். என்னுடைய சக்தி அனைத்தும் ஆகாயத்தி லுள்ள தேவனுல் அளிக்கப்படுகிறது" என்ருன். அவ் வளவுதான். மதியற்ற மன்னன் குருட்டுத்தனமாகவும், முரட்டுத்தன மாகவும் அப்படியே நம்பி விட்டான். ரஸ்புடீனுக்குத் தரசானு தாசனுகிவிட்டான். ரஸ்புடீன் இடும்பணிகளை பயபக்தி விசுவாசத்துடன் செய்து வந் தான்.

மாபாதகன் மதப் போரவையில் புகுந்து கொண்டு மன்னர் மன்னனை "ஜாரைத் தன் ஏவலாளனுக்கிக் கொண்டான் என்ருல், மடத்தனமான மதப்பற்று ஒழி

யக் கூடாதா என்ற எண்ணம் பிறக்காமல் வேறென்ன தோன்றும்?

அரசன் அடிமை யானதும் உள்நாட்டு விவரங்களில் ரஸ்புடீன் தலையிட்டான். தடுக்க ஆள் கிடையாது. பொதுக் காரியங்களில் ஈடுபட்டான் அங்கும் அவன் அதிகாரம் வென்றது. அயல் நாட்டு விஷயங்கள்— அதற்கும் ரஸ்புடீன் தான் அதிகாரியானான். இவ்வளவிற்கும் காரணம் அவன் 'தேவன்' அருள் பெற்றவன் என்பதுதான்.

ருஷ்ய நாட்டின் அதிகாரிகள் அனைவரும் ரஸ்புடீனின் சூத்திரப் பாவையாயினர், அவன் எப்படி யாட்டினாலும் அதிகாரிகள் ஆடத் தலைப்பட்டனர். ஏன் ருஸ்யாவின் ஒவ்வொரு பதுமையும் ஆடத் தலைப்பட்டது.

அவன் முதல் பார்வை மாதா கோவில்கள் மீது பட்டது. "வார்னார்வா" என்பவன் எழுதப் படிக்கத் தெரியாதவன்; ஒரு குக்கிராமவாசி; தோட்ட வேலை செய்து வந்தவன்; சில சமயங்களில் கூலி வேலையும் செய்திருக்கிறான். இத்தகு, அவன், ஒருநாள் மாதா கோயில் உபதேசியாக அமைக்கப்பட்டான். பின்னர், படிப்படியாக உயர்ந்த பதவிகளை வகித்து கடைசியாக அந்த "வார்னார்வா" ரஸ்புடீன் பிறந்த "தொபால்ஸ்க்" என்னும் இடத்தில் உள்ள மாதா கோயிலுக்குப் பிஷப்பாக உயர்த்தப்பட்டான். பிஷப்பாக உயர்த்தியது யாராய் இருக்க முடியும்? நம்முடைய ரஸ்பீடீன் தான். எழுதப் படிக்கத் தெரியாத இவன் பிஷப்பாகப்பட்டு விட்டான். ஏன்? இவன் ரஸ்புடீனின் பால்ய நண்பன், காமக்களியாட்டத்தில் சிறுவயதில் தனக்கு அனுசரணையாக நடந்து கொண்டான் என்பதற்காகப் பிஷப்பதவி கொடுத்து அவனை மகிழவைத்தான்.

108399

தகுதியற்ற இவன் பிஷப்பானதும் தனக்கு வேண்டியவர்களை யெல்லாம் உபதேசிகளாக்கிக் கொண்டான். அவனுக்கு மிகவும் வேண்டிய ஒரு சாதாரண உபதேசி

இறந்து விட்டான், மகாத்மாக்கள் கோஷ்டியில் இறந்த உபதேசியின் பெயரையும் எழுதி விட்டான்.

மகாத்மாக்கள் கோஷ்டியில் இறந்துபோனவர்களின் பெயரை சேர்க்க "ஆச்சார்ய சங்கம் (Holy Synod) என்ற ஒரு புண்ணிய நிலையத்திற்குத்தான் அதிகாரம் இருந்தது. அந்தச் சங்கத்தார் இறந்து போனவர்களின் பெயர் மகாத்மாக்கள் கோஷ்டியில் சேர்க்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்து மன்னனுக்கு அனுப்புவர். மன்னர் அதை ஆமோதித்த பின்னர் தான் அப்பெயர் மகாத்மாக்களின் கோஷ்டியில் சேரும். அப்படியிருக்க திடீர் பிஷப்பான "வார்ஞர்வா" பரிசுத்த ஆச்சாரிய சங்கத்தையும், ஜார் மன்னனையும் பொருட் படுத்தாமல் இறந்த ஒரு சாதாரண உபதேசியை மகாத்மா வாக்கி விட்டான். இச் செய்தி அறிந்த அச்சங்கத்தார் தங்கள் மதிப்பும் ஜார் மன்னர் மதிப்பும் மறைந்து விட்டதாகக் கருதி ஆத்திரம் அடைந்தனர். கூக்குரலிட்டனர்.

பின்னர் ருஷ்ய நாட்டின் மேற்குலத்தைச் சேர்ந்தவரும், அக்குலத் தலைவரும், பரிசுத்த ஆச்சாரிய சங்கத்தின் பொது நிர்வாகியுமான "ஸமாரின்" என்பவர் பிஷப் "வார்ஞர்வா"வை பீட்ரோகிராடுக்கு வரும்படி சம்மன் அனுப்பினர். சம்மன் சேர்ந்து பல நாட்களுக்குப் பிறகு வந்து சேர்ந்தான். அவன் அங்கு வந்து சேர்வதற்குள் அவனைக் காப்பாற்றுவதற்குரிய ஏற்பாடுகளை செய்து தயாராக வைத்துக் கொண்டிருந்தான் ரஸ்புடீன். ஏனெனின் அவன் செய்த குற்றத்திற்கு அவனை கிறித்துவமத சன்னியாச மடத்துக்கு அனுப்பிவிடுவார்கள். அச்சிறையிலிருந்து அவன் உயிரோடு வெளிவர முடியாது, அந்த மடத்துச் சிறையில் அவனை உயிரோடு உள்ளே வைத்து நாற்புறமும் மேற்புறமும் கற்சுவர் எழுப்பி விட்டாலும் அது யாருக்கும் தெரியாது. ஆகவே ரஸ்புடீன் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் பல ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தான்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ''ஸமாரினு''ம் மிகக் கடுமையாக அந்த வழக்கை விசாரித்தார். ''வார்ஞர்வா'' தப்ப முடியாத அளவுக்கு விசாரணையின் போக்கு இருந்தது. எல்லோரும் தீர்மானித்து விட்டனர் ''வார்ஞர்வா'' தண்டிக்கப்படுவான் என்று! ஆனல் தண்டனை ''வார்ஞர்வா''வுக்குக் கிடைக்கவில்லை. தண்டனை விதிக்கும் அதிகாரம் பெற்றிருந்த ''ஸமாரினு''க்குக் கிடைத்தது.

மும்முரமாக வழக்கு நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ''ஸமாரின்'' வேலையினின்றும் நீக்கப்பட்டார்; மிக மரியாதையும் கௌரவமும் நிறைந்த அந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டதோடு நிற்கவில்லை; பீட்ரோகிராடை விட்டு நாடு கடத்தப்பட்டார். பின்னர் ''வார்ஞர்வா'' பிஷப்பாகவே கண்ணியத்துடன் திரும்பிச் சென்ருன் சாதாரண உபதேசியும் மகாத்மாவாகவே அரசாங்க ஏடுகளில் பதியப்பட்டு விட்டான். இவ்வளவு காரியங்களையும் செய்தவன் ரஸ்புடீன் தான். ஆச்சாரிய சங்கத்தாரும் ரஸ்புடீன் முன் எதிர்த்து நிற்க முடியவில்லை. ருஷ்ய நாட்டு மன்னன் ஜாரும், ஜாரிணுவும், சீமான்களும், சீமாட்டிகளும் தங்களுடைய உச்சி மயிரை ரஸ்புடீனின் காற்பெருவிரலில் சுற்றிக்கொண்டிருக்கும்போது பாமரர்கள் என்ன செய்ய முடியும்?!

இவனது அளவுக்கு மீறிய அட்டூழியங்கள் கி. பி 1909 வரையில் தங்கு தடையின்றி நடைபெற்று வந்தன. மலத்தின்மீது சந்தனம் தெளித்து விட்டு இது மலமல்ல சந்தனம்தான் என்று எவ்வளவு நாள் ஏமாற்ற முடியும்? அதுபோலவே ரஸ்புடீன் தவறுகளை எவ்வளவு நாட்களுக்கு மக்களிடம் மதத்தின் பெயரைச் சொல்லியும், ஆண்டவன் பெயரைச் சொல்லியும் ஏமாற்ற முடியும்? அவன் செய்த அட்டூழியங்கள் அநியாயங்கள் அனைத்தும் அறிந்த மக்கள் தக்க சாட்சிகளுடன் அவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டனர். நாளுக்கு நாள் அவைகள் அதிகரிக்கவே ரஸ்புடீன்மீது

அன்புகொண்டு அவனை பீட்ரோகிராடுக்கு அழைத்து வர அரும்பாடுபட்ட "தியபான்" என்னும் பெரிய ஆண்டவரே அவன்மீது வழக்குத் தொடர முன்வந்தார்.

ரஸ்புடீன் ஒரு மாதா கோயில் விசாரணை ஆலயத்தின் முன் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டான். விசாரணையின்போது தன் முழுத்திறமையும் ரஸ்புடீன் காட்டியும் பலிக்கவில்லை இந்த தடவை ரஸ்புடீன் தோல்வி அடைந்தான் "தியாபான்" கட்சி வென்றது. ரஸ்புடீன் பீட்ரோ கிராடைவிட்டு வெளியேறினான்.

ரஸ்புடீன் பாதந்தாங்கிகள், சீடர்கள், தோழர்கள், தோழிகள் ரஸ்புடீனைத் திரும்பி அழைத்துவர பெரிதும் முயன்றனர். பாதிரி "இல்லியோடோர்" என்பவன் ரஸ்புடீனை நாடுகடத்தியதைக் கண்டித்து ஜார் மன்னருக்கு நீண்டதொரு கடிதம் எழுதினான். அதே நேரத்தில் ரஸ்புடீன், "தான் இனி எனது சீடர்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது" என்று அரசனுக்கு ஒரு கடிதம் எழுதினான் இந்த இரு கடிதங்களையும் கண்ட ஜார் ரஸ்புடீனை அரண்மனையின் அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டான்.

துஷ்டத்தனம் நிறைந்த கொடும் புலி, தூங்கும்போது அதன் வாலைத் தெரியாது மிதித்தவன் மீது எவ்வளவு சீற்றத்தோடு பாயுமோ அதைவிட அதிக வேகத்துடன் ரஸ்புடீன் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்ததும் "தியபானின்" மீது பாய்ந்தான். அவ்வளவுதான் தியபானின் வேலை ஒழிந்தது; சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார், இவர் மாத்திர மல்ல ஆச்சாரிய சங்கத்தின் நியாயவாதியான "மலுமியானோ" என்பவரும் நாடு கடத்தப்பட்டார். "பார்னுபாஸ்" என்னும் ஒரு கொடியவனை உயர்ந்த பதவியில் அமர்த்தினான், இதோடு நின்றானா? இல்லை! ரஸ்புடீன் மறுபடியும் நாட்டிற்குவர வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் அரசனுக்கு கடிதமெழுதி அரும்பாடு பட்டு ரஸ்புடீனை அரண்மனைக்குள்

அழைத்துக்கொள்ளச் செய்தாரே பிஷப் "இல்லியோ டோர்" அவரையும் ஒழித்து விட திட்டம் தீட்டிவிட் டான். பாம்பினும் கொடிய இந்த உடம் பெல்லாம் வஞ்சக விஷம் நிரம்பிய பாதகன் "இல்லியோடோர்" அரண்மனையிலிருப்பது அவன் விரும்பமில்லை. அவரை யும் அரண்மனையிலிருந்து வெளி யேற்றி விட்டு அவமா னம் என்னும் தண்டனையும் தந்து விட்டான்.

"கீவ்" என்னும் இடத்தில் "பெயலிஸ்" என்ற ஒரு யூதகுலப் பெரியார் இருந்தார் அவர் சற்குணர், நல்லொ ழுக்கமும் உடையவர் இவர் இருப்பது ரஸ்புடீனுக்குப் பிடிக்கவில்லை. சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தபடி அவர்மீது ஒரு வழக்கு தொடங் கியது அதில் "பெய்லிஸ்" என்னும் அப்பெரியாரை குற்றவாளியாக்கிவிட தீர்மானித்தான். பல சூழ்ச்சிகள் செய்தான். பலிக்கவில்லை. கடைசியாக ஜூரர்களை கலைத்து வந்தான் ஒருவரோடு ஒருவர் பகைகொள்ளும் படி சூழ்ச்சிகள் செய்தான் பின்னர் அப்பெரியார் மீது அதி அநியாயமாக கொலைக்குற்றம் சாட்டியேவிட்டான்.

அரசமாளிகையினின்றும் அவமானத்துடன் வெளி யேற்றப்பட்ட "இல்லியோடோரும்" ரஸ்புடீன் மீது மிகுந்த கோபம் அடைந்தான். அவனை அடக்கியே தீரு வேன், என்று சூளுரைத்துக் கொண்டான். அவன் மீது பல வழக்குகளைக் கொண்டுவர தன் முழு முயற்சிகளை யும் செலவு செய்தான். இந்த வழக்கை வெளிப்படை யாக அதாவது வாதியாக பிஷப் "ஹெர்மோஜன்" என் பவரைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு உள்ளிருந்து வேலை செய்து வந்தான்.

அந்த வழக்கின் சாரமாவது :—

கிரிகரி ரஸ்புடீன் பெரிய குடும்பங்களைச் சேர்ந்த மாதர்களுடன் பகிரங்கஸ்நான கட்டங்களுக்குச்சென்று மற்ற பல பெருமாட்டிகளும், சீமாட்டிகளும் ஸ்நானம் செய்துக்கொண் டிருப்பதைச் சற்றும் பொருட்படுத்

தாமல், சற்றும் நாணமில்லாமல் தன்னுடன் வந்திருக் கும் மாதர்களுடன் கண்டோர் வெட்கப்படும்படியாக கீழ்த்தரமான முறையில் ஜலக்கிரீடை செய்கிறுன் என்பது.

இந்த வழக்கைப்பற்றி ரஸ்புடீன் கவலை கொள்ள வில்லை. சமாதானம் கூறிவிடலாம் என்று கர்வத்தோ டிருந்தான். அவன் சமாதானம் வெற்றி பெறவில்லை. கடைசியாக ரஸ்புடீன் குற்றவாளியென்றே தீர்மானிக் கப்பட்டான். பின்னர் அவன் 'பீட்ரோ கிராடை' விட்டு வெளியேற்றப் பட்டான்.

ஆயினும் என்ன! மறுபடியும் எப்படியோ வந்து விட்டான். இப்போதும் அவனுடைய அதிகாரமோ அந்தஸ்தோ, சற்றும் குறையவில்லை. முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமாயிற்று.

இப்போது அவன் செய்தவைகள்:—

பெரும் கல்விச்சாலைகள் மாதாக்கோயில்கள்-பத்தி ரிகைகள் - நாடகம் - புத்தகங்கள் பரிசீலனை செய்யும் இடங்கள் முதலிய மிக முக்கியமான இடங்களில்இருந்த நூற்றுக்கணக்கான நல்லவர்கள் வேலையிழந்தனர். அதற்குப் பதில் ரஸ்புடீன் அபிமானப் புத்திரர்கள் அமர்த்தப்பட்டனர், இந்த வழிமுறைகளை கையாண்டு ருஷ்ய நாட்டை ஆட்டிப் படைத்தான். ஜார் மன்னன் வார்த்தையைவிட அதிக ஆற்றல் பெற்றிருந்தது ரஸ்பு டீனின் வார்த்தைகள்.

''ஜாரிணுடாக்மார்'' என்னும் அம்மையார் ஒருவர் தான் ரஸ்புடீனின் உண்மை உருவத்தை நன்கு உணர்ந் திருந்தார் அவன் அரண்மனைக்குள் செய்துவந்த அட்டூ ழியங்களைக் கண்டு அவன்மீது மிக்கக் கோபங்கொண்டு அவனின் செய்கைகளைக் கவனித்து வந்தாள் இந்த அம் மையாரையும் தன் வலையில் வீழ்த்த ரஸ்புடீன் செய்த சூழ்ச்சிகள் பலிக்க வில்லை. இந்த கிழவி என்ன செய்ய முடியும் என்று எண்ணி இறுமாந்திருந்தான்.

எந்த வேலை வேண்டுமானாலும், எந்தக் காரியம் நிகழ வேண்டும் என்றாலும், மந்திரிகள் தயவையோ—மன்னன் தயவையோ நாடுவதில்லை. நாடினாலும் காரியம் நிகழ்வதில்லை ஆனால் ரஸ்புடீன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அந்த நாட்டில் ஆகாத காரியமில்லை. ரஸ்புடீன் குப்பையில் கிடக்கும் காகிதத்துண்டில் "ரஸ்புடீன் கட்டளையிடுகிறார்" என்று எழுதி அனுப்பினால் மீற ஜார்மன்னராலும் முடியாது. ஆகவே, எல்லோரும் ரஸ்புடீனின் தயவையே நாடினர். "ரஸ்புடீனும் காரியத்திற்கு ஏற்றவாறு கமிஷன் பணம் வாங்கி விடுவான் இந்தக் கமிஷன் காணிக்கைகள் நாள்தோறும் அதிகமாகக் குவிந்த வண்ணம் இருந்தன. மந்திரிமார்களே ரஸ்புடீன் தயவின்றி எதையும் செய்ய முடியாது.

ஒரு தடவை மாதொருத்தி பீட்ரோகிராடின் முனிசிபல் சபைத் தலைவரிடம் ரஸ்புடீனின் சிபாரிசுக் கடிதத்துடன் வந்தாள். அதைப் பார்த்த அவர் "யார் இந்த ரஸ்புடீன்" என்றார். அவ்வளவுதான் அவர் செய்த குற்றம். அடுத்த நாள் வேலை போய் விட்டது; நாடு கடத்தப் பட்டார்; சொத்து பறிமுதல்; அதில் பாதி ரஸ்புடீனுக்கு!

இந்த சமயத்தில் ஐரோப்பிய யுத்தம் வந்தது 'ரஸ்புடீன்' யுத்தத்தை விரும்ப வில்லை. ஆகவே, ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ளவே விரும்பி வேலை, செய்து வந்தான். 1916 நவம்பர் 14-ந் தேதி கூடிய "டூமா" என்னும் தேச மகா ஜன சபையில் இவ் விஷயம் கொண்டு வரப் பட்டது. அப்போது "நிகோலை விடச் பிலியூகோவ்" ரஸ்புடீனை அதிகமாகத் தாக்கிப் பேசினர். எனினும் ரஸ்புடீன் யுத்தத்தை விரும்ப வில்லை. பின்னர் ரஸ்புடீன் யுத்தம் நிகழாமல் தடுக்க தன்னுடைய கையாட்களை யெல்லாம் தூண்டி விட்டான். இதற்குக் காரணம் ரஸ்புடீன் ஜர்மன் கடன் பத்திரங்களில் கையெழுத்திட் டிருப்பதோடு

பெரிய பெரிய கம்பெனிகளில் மூதல் போட்டும் இருந்தான். இதனுல் அவன் யுத்தத்தை விரும்ப வில்லே.

இந்த உண்மைகளே மக்கள் உணர்ந்து விட்டதால் ரஸ்புடீனே எதிர்த்தார்கள். அவனே ருஷ்யாவின் விரோதி என்றும், ஜெர்மனியின் கையாள் என்றும் கருதினர். இவனின் அடாத செயல்களேக் கண்டு, ஆத்திரம் அடைந்த அதி உக்கிர கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த "பூர்ஷ்கி விட்ச்" என்பவர் 1916 டிசம்பர் 27-ந் தேதி அன்று பேசிய பேச்சால், ருஷ்ய மக்கள் உள்ளத்தில் ரஸ்புடீன் மீது விரோதமான எண்ணத்தை அதிக ஆழமாகப் பதியச் செய்து விட்டார்.

இதற்குப் பின்தான் இந்த வஞ்சக ரஸ்புடீனின் அட்டூழியங்கள் அனைத்தும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டனர். இந்த நிலைமை நாளுக்கு நாள் முற்றி ரஸ்புடீனே ஒழித்து விடவே தீர்மானித்து விட்டனர். அந்தத் தீர்மானத்தின்படி ரஸ்புடீனே ஒழிக்கப் பல சதிச் செயல்கள் நடைபெற்றன. அவற்றில் சிலவற்றைக் கீழே காணுங்கள்:—

"குஸேவா" என்னும் கீர்த்தி வாய்ந்த ராஜ தந்திர நிபுணன் ஒருவன், ருஷ்ய தேச சம்பந்தமான பல துறைகளிலும் கலந்து கொண்டு வந்தான். அரச மன்றம், முதல மற்றுமுள்ள அரச குடும்பங்கள், அரசியல் விஷயங்கள் முதலியவற்றில் மிகவும் தொடர்பு வைத்துக் கொண்டு வந்தான். அவன் ரஸ்புடீனே ஒழித்துக் கட்ட நினைத்து, கி.பி. 1913-ஆம் ஆண்டு தன்னுடைய கைத் துப்பாக்கியால் சுட்டான். ஆனுல், குறி தவறி விட்டது. தப்பித்துக் கொண்டான்.

* * *

பின்னெரு தடவை அவ்வூர் பிரபுக்கள் அனைவரும் சேர்ந்து ரஸ்புடீனுக்கு விருப்பமான "வில்லா ரேரடே" என்ற ஓட்டலில் விருந்து வைத்து ரஸ்புடீனைச் சுட்டு

விடுவது என்று தீர்மானித்தனர். ஆனால், அந்த ஏற்பாடே நிகழ வில்லை.

* • •

1914-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் லிபரல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் ரஸ்புடீனை ஒழித்து விட ஒரு பெண்ணை தயார் செய்து அனுப்பினார்கள். அவள் சாதாரண முறையில் ரஸ்புடீனைக் கண்டு பேச வேண்டும் என்று அனுமதிக் கேட் டனுப்பினாள். உடனே அவள் அங்கு அழைத்துச் செல்லப் பட்டாள். ரஸ்புடீன் முன் சென்று நின்றாள். தன் கட்டாரியை உருவினாள்; முரட்டு ஆவேசங் கொண்டு அவன் நெஞ்சினுள் செருகினாள். அது அவன் நெஞ்சில் பாய்ந்தது என்றாலும், உயிர் போக வில்லை; பலத்த காயம் மட்டும் உண்டாயிற்று.

உள்நாட்டு மந்திரி "சுவோஸ்ட்டாவ்" என்பவரும், "ரிஜீவஸ்கி" என்பவரும், 'இல்லியோ டோர்' என்பவரும் சேர்ந்து ஐந்து பேரும் முரடர்களை தேர்ந்தெடுத்து, ரஸ்புடீனைத் தீர்த்து விட தீர்மானித்தனர். ரிஜீவஸ்கி என்பவன் மனைவி, தன் கள்ளக் காதலன் "ஹெய்ளின்" என்பவனிடம் சதியாலோசனை ஏற்பாடுகளை எல்லாம் சொல்லி விட்டாள். அவன் உடனுக்குடன் ரஸ்புடீனுக்கு அறிவித்துக் கொண்டே வந்தான். ரஸ்புடீன் போலீஸ் இலாகாவிற்குப் புகார் செய்தான். போலீசார் அவர்கள் வீடுகளை பரிசீலனை செய்யும் முன் உள் நாட்டு மந்திரி மூலம் விஷயம் அறிந்து சதியாலோசனை ஏற்பாட்டு தஸ்தாவேஜிகளை எல்லாம் மறைத்து விட்டனர். இதன் முடிவு உள் நாட்டு மந்திரி வேலை யிழந்தார்; "யுஜீவஸ்கி" என்பவருக்கு மூன்று ஆண்டுகள் தீவாந்திர தண்டனை கிடைத்தது.

ருஷ்ய நாட்டின் "டூமா" சபையின் கடைசி நிர்வாகக் கூட்டம் கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு முன் கி.பி. 1916-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ந் தேதி சனிக்கிழமை

அன்று கூட்டப் பட்டது. அந்தக் கூட்டம் அதிக ஆர் வத்துடனும், பெருங் குழப்பத்துடனும் முடியும் என்று எதிர்ப் பார்க்கப் பட்டது. "டூமா" சபையும் ஆரம்ப மானது; சில விஞடிகள் நடந்தது. பின்னர் ஒரு வகைப் பர பரப்பு உறுப்பினர்களுக்குள் உண்டாயிற்று. பர பரப்புக்குக் காரணம் அங்குள்ள அனைவருக்கும் நன்கு தெரியும் அப்படி இருந்தும் யாரும் விஷயத்தை விளக்க மாகச் சொல்ல வில்லை. ஆனல் குழப்பம் ஏற்பட்டது. இந்தக் காரணங்களால் "டூமா" சபை கலைந்தது.

அன்று பிற்பகல் "நீ வா" நதியின் பனிக் கட்டிக் குள் ளிருந்து ஒரு உயிர் போன உடல் (பிரேதம்) தேடி எடுக்கப் பட்டது. அந்தப் பிரேதம் கொலை செய்யப் பட்டு ஆற்றிலே எறியப் பட்டது என்று பலர் கருதி னர். இது சாதாரண சவமாய் இருந் திருந்தால் இவ் வளவு பர பரப்பு ஏற்பட் டிருக்காது டூமா சபையும் கலைந் திருக்காது. இத் தகைய பெரிய தொரு அதிர்ச்சி சியைத் தந்த அந்த 'சவம்' யாருடையது என்பது எல் லோருக்கும் நன்கு தெரியும். இறந்தவன்——தான்! இருந்தும் அவன் பெயரை இன்னும் பகிரங்கப் படுத்த வில்லை. அந்த அளவுக்குத் துணிவு யாருக்கும் வர வில்லை. இருந்த போதிலும் ருஷ்ய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்தக் கொலையைப் பற்றியப் பேச்சு தான். இந்தக் கொலை விஷயம் அறிந்த பின்னர் திகிலோ பயமோ கொள்ளாதார் பீட்ரோ கிராடில் எவரு மில்லை. இந்த நிகழ்ச்சியை வெளியிட பத்திரிகைகளுக்கும் பயமா யிருந்தது. இருப்பினும் இந்த விஷயத்தை "நாவாய்வ் ரீமியா" என்னும் பெயருடைய செய்தித் தாளே துணிந்து முதன் முதலில் பின் வருமாறு வெளி யிட்டது.

# " படு கொலை "

"இன்று காலையில் "பீட்ராவ்ஸ்கி" பாலத் தருகில் 'நீவா' நதியில் மிதந்து கொண் டிருந்த ஓர் ஆண் பிரேதத்தைப் போலீசார் கண்டு பிடித்தனர் "

இவ்வளவுதான் அதில் அச்சிடப்பட் டிருந்தது.

ஆனால் யார் கொலையுண்டது என்பதைப் பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அவன் யார் என்பது எல்லோருக்கும் தெரியும்!

அன்று காலை 10 மணிக்கு நீவா நதிக்கரையில் ஒரு பிரேதம் மிதந்துகொண் டிருப்பதாக வதந்தி கிளம்பியதும் பீட்ரோ கிராடிலுள்ள நகர போலீஸின் அதிகாரிகள் அனைவரும் 'பீட்ராவ்ஸ்கி' பாலத்தருகில் வந்து குவிந்து விட்டனர். அது மாத்திரமல்ல, ஆயிரக் கணக்கில் மக்கள் கூட்டம் அங்கு வந்து குவிந்தன. மேலும் மக்கள் வரா வண்ணம் அந்தப் பாலத்திற்கு செல்லும் எல்லா வழிகளையும் மூடிவிட்டனர். அந்த வழிகளி லெல்லாம் பலமான போலீஸ் படைகள் நிறுத்தப்பட்டன.

அந்த பாலத்திற்கு வந்தவர்களில் முக்கியமானவர் கள்:—(1) அப்பீல் கோர்ட்டின் துணை செயலாளர் "ஸவாதஸ்கை" (2) முக்கிய வழக்குகளை மாத்திரமே விசாரிக்கும் "ஸிரிடா என்னும் பெயருடைய ஜட்ஜ்" (3) பீட்ரோ கிராடு நகரத்தின் அதிபதியாகிய மேஜர் ஜெனரல் "பேலக்" (4) உக்கிரானுவின் எஜெண்டாகிய மேஜர் ஜனரல் "குளோப்புட்ச் சேவ்" (5) ரகசியப் போலீஸின் சூப்ரிண்ட்டெண்டெண்ட் "கிரிப்பிட்சினி சோவ்" (6) நதிதாரை போலீஸின் முக்கியஸ்தர் லெப் டிணென்ட் ஜெனரல் "நெலிமோவ்" (7) பிட்ரோகிரா டின் நான்காவது டிவிஷன் போலீஸ் மாஸ்டர் மேஜர் ஜெனரல் "ஹால்லி" ஆகியவர்கள்.

அங்கு கூடியுள்ள போலீஸ் அதிகாரிகளிடம் பிரேத விஷயமாகப் பேச வேண்டி பிட்ரோ கிராடிலுள்ள பிரமுகர்களெல்லாம் வந்து கூடிவிட்டனர். நதியின்மீது படிந்திருந்த வெண்மையான பனிக்கட்டிகள் விலகியதும் போலீசார் தங்கள் காரியங்களில் ஈடுபட்டனர். அங்குள்ள மக்கள் பிரேதத்தை இன்று காலையில்தான் கண்டோம். என்று போலீசாரிடம் கூறியதும், ஆற்றிலிறங்கித் தேடலாயினர். பாவத்தின் கைப்பிடி கம்பிகளில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. உடனே அங்கிருந்த நதிதாரைப் போலீசைச் சேர்ந்த அனுபவ மிக்க ஒருவன் ஆற்றில் இறந்த உடல்களைக் கண்டு பிடித்துக் கரை சேர்ப்பதில் நிபுணன். அவன் அந்த நதியின் நீரோட்டத்தை அளந்து அந்தப் பிரேதம் நெடுந்தூரம் அடித்துக்கொண்டு போயிருக்காது என்று உறுதியாகக் கூறினான்.

அதன் பின் ஒருவன் அந்தப் பாலத்திலிருந்து சுமார் அறுபதடி தூரத்தில் நீந்திக்கொண் டிருந்த படகுகளுக்குச் சென்று, தேடிப் பார்த்து, அங்கே மிதந்து கொண்டிருந்த ஒரு பெரிய பனிக்கட்டியின் கீழ் அதிக காயம் அடைந்திருந்த ஒரு பிணத்தை வெளிப்படுத்திக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தான். அதன் உடம்பில் ஐந்து இடங்களில் காயங்கள் இருந்தன. தலையில் இரண்டு காயங்களும் மார்பில் இரண்டு காயங்களும், வயிற்றில் ஒரு காயமும் காணப்பட்டன. அங்கிருந்த அதிகாரிகளும் பிரமுகர்களும் அவன் இன்னான் என்று சந்தேக மறத் தெரிந்து கொண்டனர். உடனே டாக்டர் பரிசோதித்து காயங்கள் கைத்துப்பாக்கியால் நேர்ந்தவை என்று கூறினர். முகம் சற்று உருமாறி யிருந்தது. கைகால் கட்டப்பட் டிருந்தன. கழுத்தின் பின்புறம் கிழிக்கப் பட்டிருந்தது.

அந்தப் பிணம் தன் இரு கரங்களையும் தலைக்கு மேல் உயர்த்திக் கொண்டிருந்தது. பனியால் விறைத்

துப் போய் விட்டதால் மடக்குவது மிகவும் கடினமாயிருந்தது. அதனுல் சவப் பெட்டிக்குள் அந்தப் பிணத்தை வைக்க முடியவில்லே. பின்னர் பெட்டியின் ஒரு பாகத்தை உடைத்து நீளமாக்கிப் பலகைகளேச் சேர்த்துப் பெரியதாக்கிய பின்னர்தான் அந்தப் பிணம் பெட்டிக்குள் வைக்க முடிந்தது. உடனே இராணுவ வைத்தியசாலேக்குப் பரிசிலனேக்காக கொண்டுபோகப் பட்டது.

அவன் இறந்தான்! வஞ்சகன் வதைக்கப்பட்டான்! காமாந்தகன் அழிக்கப்பட்டான்! மதப் போர்வையில் புகுந்து மக்களே மருட்டி வந்த ம்பாதகன் மறைந்தான், இந்நாட்டின் அநீதி அழிந்தது. நோய் நீங்கியது என்று மக்களின் ஒரு பகுதியினர் மகிழ்ச்சியுடன் கையொலி யெழுப்பினர்.

அற்புதப் பிறவி மறைந்தது! என்னே ஆதரித்த ஆசான் மறைந்தார்! இரண்டாம் ஏசுநாதர் இருந்த இடம் தெரியாமல் போனுர்! எனக்கு உத்தியோக மளித்த உத்தமர் மறைந்தார் என்று முகவாட்டம் அடைந்த மக்களும் அங்கு இல்லாமல் இல்லே. இதை விட இன்னும் அதிகமான துக்கக் கடலில் மூழ்கிக் கிடந்த மக்களும் அங்கு இருந்தனர்.

இப்படி யெல்லாம் மக்கள் நினேக்க காரணமானவன் யார்? அந்த நதியிலே மிதந்த பிணம் எது? என்று நீங்கள் கேட்கமாட்டீர்கள். உங்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் சொல்ல வேண்டிய கடமையுணர்ந்து சொல்கிறேன், "ரஸ்புடீன்" தான்!

* * *

ரஸ்புடீனுக்கு விரோதமாய் பல கூட்டங்களில் அவனே மிகவும் வன்மையாய் கண்டித்துப் பேசியவர் "பூரிஷ்விட்ச்" என்பவர். 1916-ம் ஆண்டு டிசம்பர் 27-28-ந் தேதிகளில் அவர் பேசிய பேச்சுக்கள் ரஸ்

புடீன்மீது விரோத உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. அதுவரையில் யாரும் "ரஸ்புடீன்" என்னும் பெயரை கூறி கண்டித்ததே கிடையாது. ஆனால் "பூரீஷ்விட்ச்" ரஸ்புடீன் பெயரைக் குறிப்பிட்டு அவன் செய்து வந்த அட்டூழியங்களை பகிரங்கமாகக் கூறிவிட்டார். அவரின் பேச்சுகளைக் கேட்ட ருஷ்ய நாடு ஒரு புத்துணர்ச்சி பெற்றெழுந்தது. இதை அறிந்த 'ரஸ்புடீன்' "பூரிஷ் விட்ச்" என்பவரிடம் சமாதானம் செய்துகொள்ளக் கருதி அவனை அறிமுகப்படுத்திக்கொண்டு பின்னர் அவனையும் மயக்கிவிட தீர்மானித்தான். தன் தோழியர்களிடம் செய்தியை அறிவித்தான். தங்கள் குருநாதன் கட்டளையை நிறைவேற்றி வைக்க கண்ணியம் மிக்க கன்னியர் ஒத்துக்கொண்டு, இந்த வேலையை எளிதில் முடித்து வைக்க மிகவும் தகுதியுள்ள இளவரசர் "பெலிக்ஸ்யுஸ்ஸுபோவ்" என்பவரைத் தேர்ந்தெடுத்தனர்.

கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பூரிஷ்கிவிட்சுக்கும் - இளவரசன் 'பெலிக்ஸுக்'கும் அதிக நட்பு உண்டு. எல்லோரும் இளவரசரிடம் தூதுசென்று தன் குருநாதன் ரஸ்புடீனின் கருத்தைத் தெரிவித்தனர். இளவரசரும் ஒத்துக் கொண்டார். பின்னர் பூரிஷ் வுட்சுக்கும் - ரஸ்புடீனுக்கும் இடையே வேலை செய்து பார்த்தார். பலிக்கவில்லை.

'பூரிஷ் விட்ச்' ரஸ்புடீனை ஒழித்துக் கட்டவே தீர்மானித்து விட்டதோடல்லாமல், ரஸ்புடீனை ஒழிக்கும் திருப்பணிக்கு "இளவரசரையே" தலைமைத் தாங்கும்படியும் வற்புறுத்தி, ஒப்புக்கொள்ள செய்து விட்டான். பின்னர் இளவரசர் அறிமுகம் செய்து வைப்பதுபோல் நடித்து ரஸ்புடீனை தாங்கள் விரும்பிய இடத்திற்கு அழைத்துச்சென்று விடலாம் என்று தீர்மானித்தார். அதன்படி அறிமுகம் செய்து வைக்க "மாய்கா" கால்வாயின் அருகிலுள்ள "அலங்கார மாளிகை" என்னும் இளவரசரின் கோட்டையை தீர்

மானித்தனர். அங்கு விருந்து நடத்துவதென்றும் தீர்மானித்தனர், அதன்படியே அன்று இரவு ஒரு ஆள் வந்து ரஸ்புடீனை அழைத்துச் சென்றான். இளவரசர் மாளிகையில் மிக உயர்தரமான விருந்து ஏற்பாடாகியிருந்தது. ரஸ்புடீன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பெரிய இடத்துப் பெண்களெல்லாம் அங்கு நிறைந்திருந்தனர். விருந்து ஆரம்பமானது. ரஸ்புடீன் நன்றாகக் குடித்துவிட்டு பெண்களிடம் அருவருக்கத் தக்க வகையில் சேட்டைகள் புரிந்தான்.

கடைசியாக இளவரசரின் வைப்பாட்டியின் தோள்மீது கைபோட்டு அணைக்கத் தொடங்கினான். இதைக் கண்ட இளவரசர் தன் மன வெறுப்பை முகத்தில் காட்டியவுடன் ரஸ்புடீன் "நான் எவ்விடத்திலும் எல்லா விதமான சுயேச்சையுடன் தான் நடந்து கொள்வேன். மேலும், பெண்களுடைய மேன்மை தாழ்மையைப் பற்றி நான் பாராட்டமாட்டேன். எல்லோரும் எனக்குச் சமமே" என்று பதில் கூறினான். இதைக் கண்டு சகியாத ஒருவர் "ஏ, பட்டிக்காட்டு மிருகாண்டி நீ பேசுவதை நிதானித்துப் பேசு" என்று கோபத்துடன் கூக்குரலிட்டார். இதற்கு ரஸ்புடீன்:— 'என்னருமைத் தோழ! என்ன அபாயம் நேர்ந்து விட்டது. நான் என் இஷ்டம்போல் பேசுவதைத் தடுக்க நீ யார்" என்றான். பின் வாய் பேச்சு முற்றி கைக்கலந்தனர். அங்கிருந்தவர்கள் குறுக்கிட்டு சமாதானம் செய்து வைத்தனர். பின்னர் ரஸ்புடீன் சந்தோஷமாகவே கேளிக்கைகள் புரிந்தான். சில நிமிடங்கள் சென்றதும் இளவரசர் யுஸ்ஸுபோவின் சொந்த மனைவியான இளவரசியின் மீதும் கைவைத்துவிட்டான். இதைக் கண்டு கோபத்தால் கொதித்து எழுந்தார் இளவரசர். இவர்தான் அப்போது ருஷ்ய நாட்டின் பெரிய பணக்காரர். அரச பரம்பரையைச் சேர்ந்தவர். உயர் குலத்தவர். அத்தகு செல்வச் சீமானும் அரச குமாரனுமான யுஸ்ஸுபோவின் மனைவியின்மீது வஞ்

சக ரஸ்புடீன் கைவைக்கவே, இளவரசர் ஆத்திரத்துடனும் அவமானத்துடனும் எழுந்து ரஸ்புடீனைக் கண்டித்தார். அதை அவன் மதிக்கவில்லை. உடனே இளவரசரும், பூரிஷ்விட்சும் தங்களுடைய கைத்துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டனர். ரஸ்புடீனும் தன் மடியிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டினான். இருதரத்தாரும் அதே விநாடியில் சுட்டுக்கொண்டனர். ரஸ்புடீன் மீது இரண்டொரு குண்டுகள் பாய்ந்தவுடன் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தான். எதிரிகள் மேலும் சுட்டுக்கொண் டிருந்ததனால், அவன் வாயிற்படியை அடைவதற்குள் வீழ்ந்து விட்டான். இனி அவன் எழுந்து நடமாடப் போவதில்லை!

விருந்து கலைந்தது. ரஸ்புடீன் ஒரு கோணிப் பைக்குள் மூட்டைபோல் கட்டப்பட்டான். கோட்டைக் கதவு திறக்கப்பட்டது. மூட்டையுடன் இளவரசர் வெளிவந்தார். அங்கு தயாராக இருந்த காருக்குள் மூட்டையை எறிந்தார். இளவரசரும், பூரிஷ்விட்ச்சும் ஏறிக்கொண்டனர். கார் வேகமாகச் சென்றது. 'நீவா' நதி தீரத்திலுள்ள பாலத்துக் கருகில் நின்றது. இருவரும் இறங்கினர். மூட்டையைக் கீழே தள்ளி அவிழ்த்தனர். அவ்வளவுதான். மூட்டைக்குள் இருந்த ரஸ்புடீன் கையையுங் காலையும் இதைத்துக்கொண்டு திமிறினான். இதைக் கண்டு பயந்தே போயினர். அவன் உடம்பென்ன இரும்பா? என்று வியந்தனர். பின்னர் அவர்கள் இருவரும் வண்டியோட்டியும் சேர்ந்து ரஸ்புடீனின் க்கைகால்களை கட்டினர். மூவரும் அவனைத் தூக்கி ஒரு பாறையில் மோதினர். அவன் இறந்தான் என்று தெரிந்தபின் பாலத்தின் மீதுள்ள தூண் ஒன்றிலும் பலமாகப் பலமுறை மோதிய பின் ருஷ்ய நாட்டைத் தலைகீழாய்க் கவிழ்த்தக் கயவனை காமுகனை –தலைகீழாய் நதியில் எறிந்துவிட்டுச் சென்றனர்.

* * *

விசாரணை நிகழ்ந்தது. ரஸ்புடீனின் இரு குமாரிகள் விசாரிக்கப்பட்டனர்; அன்றியும் அவளுடன் மிகவும் நெருங்கிப் பழகி வந்தச் சீமாட்டிகளையும் விசாரித்தனர். ரஸ்புடீன் குமாரிகள் கூறிய வாக்குமூலச் சுருக்கம்:-

"பெலிக்ஸ் யுஸ்ஸூபோவ் கொண்ட ஸூமா நோகோவ் எல்ஸ்டன்" என்னும் பெயருடைய இளவரசர் திடீரெனச் சில தினங்களாக ரஸ்புடீன் வீடுதிக்கு நேர்முகமாகவும், மாறு வேடம் பூண்டும், வந்ததாகவும், அவர் வந்தது ஒருவித அந்தரங்க ஏற்பாடு நிகழ்த்துவதற்கென்று தாங்கள் கருதுவதாகவும், அவர் இரவு நேரங்களில்தான் அதிகமாக வருவதென்றும், அதுவும் நடு நிசிக்கு மேல்தான் என்றும் அவர்கள் கூறினார்கள். கொலை நடந்த அன்று மாலை ரஸ்புடீன் படுக்கைக்குப் போகு முன் இளவரசர் வந்தவுடன் தன்னை எழுப்பும்படி எல்லா வேலையாட்களுக்கும் உத்தரவிட்டிருந்தானென்றும், இரவு மணி இரண்டு அடித்தவுடன் ஓர் உயரமான ஆள்வந்து 'ரஸ்புடீனைப் பார்க்க வேண்டும் இளவரசரால் அனுப்பப்பட்டவன் என்று கூறியதாகவும், உடனே அவன் ரஸ்புடீனின் படுக்கை அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பிறகு இருவரும் சென்று விட்டதாகவும் கூறினர்."

ரஸ்புடீன் இறந்த செய்தியைக் கேட்டவுடன் மயக்க மடைந்து கீழே வீழ்ந்தார் உள் நாட்டு மந்திரி "புரோட்டோ பாப்பாவ்" அவருக்கு ரஸ்புடீன் மீதிருந்த பக்தி அளவு கடந்தது. ஆகவே, அவர்தான் எல்லோரைக் காட்டிலும் அதிக துயரமடைந்தார். உடனே கட்டளை யிட்டார் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும் என்று! ஆனல் மக்கள் அவரை எதிர்த்தனர்.

*30—12—1916* அன்று ருஷ்ய நாடு ஒரே மகிழ்ச்சியால் தாண்டவமாடிற்று. ரஸ்புடீன் இறந்த செய்தி

வெளியானவுடன் 'ஒருவன் தன் பெயரை அறிவிக்காமல் 15,000 ரூபிள்ஸ் இனுமாகத் தந்து, அந்த நிதிக்கு "பெலிக்ஸ் யுஸ்ஸுபோவ் சகாயநிதி" என்று பெயர் வைக்கும்படியாயும், இதன் வருவாய் போர்க்களத்தில் காயமடைந்த வீரர்களுக்கு உதவவேண்டும் என்றும் "ஜெம்ஸ்ட் வோவின்" சங்கத்திற்கு எழுதி வைத்தான்.

ரஸ்புடீனை ஒழிக்கக் காரணமாயிருந்த "இளவரசர் யுஸ்ஸுபோவை" எல்லோரும் புகழ்ந்து பாராட்டினர். அவனை ஒரு உத்தம புருடனுகவே எல்லோரும் மதித்து மரியாதை செய்தனர்.

ரஸ்புடீனைச் சேர்ந்த சில பிற்போக்குவாதிகள் மாத்திரம் சுறுசுறுப்புடன் வேலை செய்து வந்தனர். ரஸ்புடீன் பிணம் நதியிலிருந்து வெளியானதும் மந்திரிகளின் அவசரக் கூட்டம் என்று கூடி, ரஸ்புடீன் கொலையுண்டபோது "ஜார்" மன்னர் போர்க்களத்தில் இருந்தமையால் இச் செய்தியை அறிவிக்க "பிடரிம்" என்னும் மகாகுருவை அனுப்பி வைப்பதென தீர்மானித்ததுடன், கொலை சம்பந்தமான வழக்கை உடனே விசாரணைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் தீர்மானித்தனர். இந்த வழக்கு இராஜத்துரோக குற்றங்களை விசாரிக்கும் போலிசாரால் நடத்தப்பட வேண்டும் என்று உள்நாட்டு மந்திரி "புரோட்டோ பாப்பாவ்" அச்சபையில் தெரிவித்து, மிக முக்கிய வழக்குகளை விசாரிக்கும் ஸெவீடர்" என்பவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்.

ஆனுல் இந்தமுடிவை முதல்மந்திரி "ட்ரீபா" சட்ட மந்திரி "மகாரோ" ஆகியவர்கள் பலமாக எதிர்த்தனர். இந்த வழக்கை சாதாரண போலிசே நடத்தவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படக்கூடாது என்றும்வாதாடினர். இளவரசர் யுஸ்ஸுபோவையும், கன்சர்வேட்டிவ் உறுப்பினர் பூரிஷ்விட்சையும் கைதி செய்யக் கூடாது என்பதே அனைவரின் நோக்கம். ஆகவே வாக்குவாதம்

வலுத்தது. இறுதியில் சாதாரண போலீசே விசாரிக்க வேண்டுமென்றும், குற்றவாளியைக் கொலை செய்யக் கூடாதென்றும், சிறையில் அடைக்கக் கூடாதென்றும் வேண்டுமாயின் குற்றவாளிகள் நகரை விட்டுச் செல்லக் கூடாதென்று உத்தர விடலாம் என்றும் மெஜாரடி உறுப்பினர்கள் ஒரு மனதாய் முடிவு கட்டினர். மேலும் குற்றவாளிகளை வாதியின் சார்பாளர்கள் முன்னிலையில் விசாரிக்கக் கூடாதென்றும், குற்றவாளிக ளிடம் ஏதாகி லும் கேட்டு அறிய விரும்பினால் எழுதிக் கேட்க வேண்டும் என்றும், அவர்கள் கூறும் பதிலையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எதிர் கட்சியினர் தீர்மானம் நிறைவேற்றி விட்டனர். அவர்களை எதிர்த்து புரோட்டோ பாப்பாவால் ஒன்றும் செய்ய முடிய வில்லை.

1917-ம் ஆண்டு சனவரி முதல்நாள் ஜார் மன்னர் போர் முகாமி லிருந்து வந்தார். அவர் வந்ததும் "புரோட்டோ பாப்பாவ்" தன் குருநாதன் கொலை யுண் டதைக் கூறி மிகவும் வருத்தப் பட்டான். ஜார் மன் ன்றும் அள விட்டுச் சொல்ல முடியாத துக்கம் அடைந்தார்.

விசாரணை நிகழ்ந்தது. புரோட்டோ பாப்பாவும் தன் முழுத் திறமையும் காட்டினான். ஜார் மன்னரிடம் அதிக அதிகாரங்களைப் பெற்று, மந்திரி சபையைத் தன் விருப்பப்படி ஆட்டிப் படைத்தான். ஜார் மன்னர் ரஸ்புடீன் மீது வைத்திருந்த அன்பினால் அவனின் சீடன் புரோட்டோ பாப்பாவை கண்டிக்க வில்லை; அவன் விருப்பப் படியே விட்டு விட்டார்.

"ரஸ்புடீன் கொலை வழக்கை விசாரிக்கக் கூடாது," "குற்றவாளிகளைத் தண்டிக்கக் கூடாது" என்று நாடெங் கும் கூக்குரல் எழுப்பினர். மக்கள் அனைவரும் இந்த மாபெரும் கிளர்ச்சியை நாளுக்கு நாள் அதிகமாக்கிக் கொண்டே யிருந்தனர். இந்தக் கிளர்ச்சி வளர்ந்தால்

நாட்டின் நிலைமை மிகவும் கேவலமாகும் என்ப தறிந்த மன்னர் பயந்து விட்டார். பின்னர் "ரஸ்புடீன் கொலை வழக்கை நிறுத்தி குற்றவாளிகளை மன்னிக்கும் படி" உத்தர விட்டார். விசாரணையும் முடிந்தது. மக்களும் மன அமைதி அடைந்தனர்.

ரஸ்புடீன் இறந்தபோது அவனைப் பற்றிப் பேசப் பயந்தப் பத்திரிகைகள் அவன் கொலையுண்ட பின் நாளுக்கு நாள் புதுப்புது விமர்சனங்களை வெளியிடத் தொடங்கின. அவற்றில் சிலவற்றைக் கீழே காணுங்கள்:—

"ரெட்ச்" என்ற பத்திரிகையில் "லுவாய்" எழுதியவை:

"1915-ம் ஆண்டின் இறுதியில் இளவரசர் "குரோஞே"வின் மாளிகையில் நடந்த விருந் தொன்றில் நான் ரஸ்புடீனைக் கண்டேன். அவனைச் சுற்றிலும் பெரிய மனிதர்கள் வீட்டு கீர்த்திவாய்ந்த சிமாட்டிகள் சூழ்ந் திருந்தனர். ரஸ்புடீனின் உருவமும், உடையும் பார்க்க அறுவறுப்பைத் தருவதாய் அநாகரிக முள்ளதாய், காட்டு மிராண்டிகள் அணிவதாய் இருந்தன. விருந்துக்குப் பின்னர் அடுத்த அறைக்குள் சென்ருன். கண்ணியம் வாய்ந்த அந்த உயர்குலப் பெண்களும் அவனை தொடர்ந்தனர். அங்கு அவன் அவர்களிடம் நடத்திய ஆபாச லீலைகள் அப்பப்பா. கூறவே நா கூசுகிறது"

1916-ம் ஆண்டு பிப்பரவரியில் ஒருநாள் மகாப்பிரபு "ஜோ மிக்லோஸ்" என்பவர் மாளிகையில் நடந்த விருந்தில் மறுபடியும் ரஸ்புடீனைச் சந்தித்தேன். அப்போது அவன் "டீ" என்னும் பெயருடைய நடன சங்கீதக் காரியின், தோள்மேல் கைப்போட்ட வண்ணமல்ல!, அவளை மார்போடு அணைத்துக்கொண்டு உலாவியதைப் பார்த்தேன்."

* * *

"போரோஸோ" என்பவர் எழுதியது:—

ரஸ்புடீன் மரியாதையில்லாமல் பேசுவான், அவன் உண்ணும்போது மேஜைக்கத்தி, முள் இவைகளை உபயோகிப்பதில்லை, தன் கையையே உபயோகிப்பான். ஆகாரம் உண்டபின் தன்னுடைய கைகளை நீட்டுவான். உடனே அவனுடைய பெண்சகிகளாகிய பெருங்குலத்துச் சீமாட்டிகள் அனைவரும் சூழ்ந்துகொள்வர். ரஸ்புடீன் தன் கைவிரல்களை சப்பும்படி கட்டளையிடுவான். உடனே பயபக்தி விசுவாசத்துடன் புன்முறுவலைக் காட்டிக்கொண்டு அவனுடைய விரல்களை சப்புவர். இந்தக் காட்சியைக் கண்டு கலங்கிவிட்ப்டன். ரஸ்புடீன் தன் தோழியர்களை நாய்க்குட்டிகளைக் காட்டிலும் கேவலமாக மதித்துவந்தான் என்பதை அறிந்துகொண்டேன்.

இவைபோன்ற பல விஷயங்கள் வெளி வந்தன.

ஆண்டியாகத் தோன்றி அரச பரம்பரையை அலறச் செய்த வஞ்சக ரஸ்புடீன் இறந்தபின் ருஷ்ய நாடு புத்துணர்ச்சி பெற்று விளங்கியது. ருஷ்யநாட்டை மதச் சேற்றில் அழுத்தி வந்த ரஸ்புடீனை யொழித்துக் கட்டி தாங்களும் மூட நம்பிக்கை என்னும் முட்புதரிலிருந்து விலகினர். மத விடுதலைக்குப் பின்னர்தான் அரசாங்க விடுதலை கிடைத்தது மக்களுக்கு! இதை யாரும் மறுக்க முடியாது. ரஸ்புடீன் வீழ்ச்சிக்குப் பின்னர்தான் ருஷ்யாவில் பொது உடைமை பூத்துக் குலுங்கி இன்றும், மணக்கிறது.

* * *

மதம் என்பது சேறு. மூடநம்பிக்கை, அச்சேற்றிலிருந்து நாறும் நாற்றம். மதச் சேற்றில் அழுந்திக் கொண்டே, மூட நம்பிக்கை என்னும் துர்நாற்றத்தை அனுபவித்துக் கொண்டே பொதுவுடமைப் பூங்காவில்

பூத்துக் குலுங்கும் பூக்களின் நறுமணத்தை நுகர முடியாது. ஆக்வே மத விடுதலை முதலில்; அடுத்து அரசியல் விடுதலை. இப்படித்தான் ருஷ்யாவில் நிகழ்ந்தது.

இங்கும் அப்படித்தான் நிகழ வேண்டும். ஆகவே முதலில் மதவிடுதலைக்குப் போராட வேண்டும். பின்னர் மற்றவை தானே வலிந்து வரும். இஃது உண்மை.

மதவொழிப்புப் போர் துவக்குங்கள் முதலில். வெற்றிமாது மாலையேந்தி உங்களை எதிர்நோக்குவாள்!

# புதிய வெளியீடுகள்

**புராண – மதங்கள்** (அறிஞர் அண்ணு) 1—0—0

புராண மதங்களில் பொக்கிஷம் புதைந்து கிடப்பதாக எண்ணும் மக்களுக்கு, அவற்றில் நெளியும் புழுக்களை, படமெடுக்கும் பாம்புகளைக் காட்டி புராண – மதங்கள் பொசுக்கப்பட வேண்டியவை என்பதை அழுத்தம் திருத்த மாக மாற்ருர் மறுக்க முடியாத முறையில் எழுதியிருக்கிருர் அனைவரும் படித்தறிய வேண்டிய நூல்.

**தேன் துளிகள்** ,, 1—0—0

தேன்துளிகள் அதிகம் உண்டால் தெவிட்டும். ஆனல் இவை அண்ணுவின் தெவிட்டாதத் தேன்துளிகள். அறியாமை நோயை அகற்றி அறிவொளி வழங்கும் அரிய நூல்.

**விஞ்ஞானத்தில் அண்ணு** ,, 0—8—0

**அண்ணு காண்கிருர், கேட்கிருர்** ,, 0—8—0

**வழுக்கி விழுந்தவள்** (விருதை ந. இராமசாமி) 1—0—0

பெருமூச்சு — குழப்பம் — கண்ணீர் — தேறுதல் — இவை களையே தன் வாழ்வின் பல பாகங்களிலும் கண்டு வழுக்கி விழுந்த வனிதையை இந்நூல் நல்ல முறையில் எடுத்து விளக்குகிறது.

**என் வாழ்வு** (ரத்தினம்) 0–10—0

பருவதாக மிகுதியால் நெஞ்சில் எழுச்சியைக் கிளறும் ஆண், பெண், இவர்களின் இன்ப வேதனைகளை சித்திரிக்கும் நூல் இது.

**எகிப்து நாட்டு எழிலரசி** (தங்க–நிலாவழகன்) 1—0—0

ஈஜிப்தின் ராணி கிளியோ பாட்ரா தன் எழிலால் எத்தனைப் பேரை மயக்கி என்னென்ன லீலைகள் புரிந்தாள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

வியாபாரிகட்கு அதிக கமிஷன் உண்டு

விற்பனை நிலையம்:-

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

**286, சைனபஜார், — சென்னை - 1**

# கலைமன்ற வெளியீடுகள்

—o—

**ஊடுருவி தீட்டியவை :—**

| | | |
|---|---|---|
| 1. | வீர மங்கை ஜோன் | ரூ. 1—0—0 |
| 2. | மக்கள் உரிமை (இங்கர்சால்) | ரூ. 1—0—0 |
| 3. | ரோமியோ—ஜூலியத் (ஷேக்ஸ்பியர்) | ரூ. 1—0—0 |
| 4. | மாஜி கடவுள்கள் | ரூ. 1—0—0 |
| 5. | லைலா மஜ்னு | ரூ. 1—0—0 |
| 6. | அன்னா (லியோடால்ஸ்டாய்) | ரூ. 1—0—0 |
| 7. | நா நா (எமிலிஜோலா) | ரூ. 1—0—0 |
| 8. | உலகைத் திருத்திய உத்தமர்கள் | ரூ. 1—0—0 |
| 9. | ரஸ்புடீன் | ரூ. 0—8—0 |

வியாபாரிகட்கு 30% கழிவு; செலவு தனி.

விபரங்களுக்கு:—
**ஸ்ரீ மகள் கம்பெனி**
122, வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை - 1

விற்பனை நிலையம்:—
**எம். எஸ். ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்
சென்னை - 1

# உளத்தைக் கொள்ளை கொள்ளும்

# உயர்ந்த நாவல்கள்

## வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| பூஞ்சோலையம்மாள் | 2 | 0 | 0 |
| முத்துலக்ஷ்மி | 2 | 0 | 0 |
| நங்கை மடவன்னம் | 2 | 0 | 0 |
| நீலலோசனி | 2 | 0 | 0 |
| தங்கம்மாள் | 2 | 0 | 0 |
| நவநீதம் | 2 | 0 | 0 |
| டாக்டர் சோணாசலம் | 2 | 0 | 0 |
| மிஸ்டர் பூச்சாண்டி எம். ஏ. | 2 | 0 | 0 |
| மருங்காபுரி மாயக் கொலை | 2 | 0 | 0 |
| சிங்கார சூர்யோதயம் | 2 | 0 | 0 |
| துரைராஜா | 2 | 0 | 0 |
| ராஜேந்திர மோகனா | 2 | 0 | 0 |
| சமய சஞ்சீவி | 2 | 0 | 0 |
| பாவாடைச் சாமியார் | 2 | 0 | 0 |
| பச்சைக்காளி | 1 | 8 | 0 |
| கலியாணசுந்தரம் | 1 | 8 | 0 |
| மாயசுந்தரி | 1 | 0 | 0 |

## செய்யூர் சாரநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| கமலா’ஸ் காதல் | 1 | 8 | 0 |
| கோகில சுந்தரி | 0 | 12 | 0 |
| சண்முக வடிவு | 0 | 12 | 0 |

விபரங்களுக்கு:—
ஸ்ரீமகள் கம்பெனி
122, வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை — 1

விற்பனை நிலையம்:.
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார் (அப்பா பில்டிங்)
சென்னை-1


Printed by The Srimagal Company, Madras-1